www.padippakam.com

ஜூலை, ஆக'92 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை: ரூ.2.5

# புதிய கலாச்சாரம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
- SEINE ; FRANCE



அண்ணாமலை நகர்:

## என்ன தண்டனை?

படிப்பகம்

www.padippakam.com



# கேட்டீரா சேதி!

## விபச்சாரம் - முதலாளித்துவத்தின் சர்வதேச கலாச்சாரம்

சென்ற மாதம் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நெதர்லாந்தில் விபச்சாரத் தொழிலை சட்டபூர்வமாக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் விபச்சார விடுதி நடத்துவது, ஈடுபடுவது, தரகு வேலை ஆகியவை தொழிலாக அங்கீகரிக்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு 838 மில்லியன் டாலர் வருவாய் கிடைக்கும். இந்திய ரூபாயில் 2500 கோடி. சதை வியாபாரத்தில் கொழுத்த வருமானம்தான்.

பெரும்பான்மை அங்கீகரிக்கிறார்கள். மக்கள் தங்கள் வருவாயில் பெருமளவு விபச்சாரத்தில் செலவிடுகின்றனர் என காரணம் கூறுகிறது நெதர்லாந்து அரசு. கள்ளச் சாராயம் குடிப்பதால் ஏழைகள் சாகிறார்கள் என்று கருணாநிதி பாக்கெட் சாராயம் கொண்டுவந்தார். அதே காரணத்தைச் சொல்லி பாக்கெட் சாராயத்தை ஒழிக்கிறேன் என்று பாட்டில் மதுவை பட்டி தொட்டி எல்லாம் கொண்டு வந்தார் ஜெயலலிதா 'பார்' புகழ.

வருமானம் என்றால் மக்கள் நலனைப் பலியிட முதலாளித்துவ வாதிகள் தயங்குவதே இல்லை. அவர்கள் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறார்கள்.

## ஆங்கிலம் இன்னமும் மொட்டையடிக்கிறது.

கேரள மாநிலம், கோழிக்கோடு அருகே சாத்தமங்கலம் என்ற ஊர். இங்கே உள்ள ஆங்கிலப் பள்ளியில் பயிலும் சிறிய மாணவர்கள் கூட விடுதியிலும் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும். தவறி தாய் மொழியில் பேசிவிட்டால் கடும் தண்டனை. இது கடுமையாகப் பின்பற்றப்படும் விதி.

சமீபத்தில் விடுதியில் தங்கியிருந்த மாணவன் தவறுதலாக தாய் மொழியான மலையாளத்தில் பேசிவிட்டான். உடனே தலைமை ஆசிரியருக்குப் புகார் பறந்தது. மாணவனை வரவழைத்து கடும் சொற்களால் திட்டினார். அத்தோடு விட்டாரா என்றால் இல்லை. தாய் மொழியில் பேசியது அவ்வளவு சாதாரண குற்றமா என்ன! அந்த மாணவனை மொட்டை அடித்து அவமானப்படுத்தி தண்டித்தார்.

வெள்ளையர்கள் நேரடியாகக் கொள்ளையடித்தார்கள். ஆனால் அவர்களது மொழியும் கல்வி முறையும் நம் ஒவ்வொருவரையும் மொட்டையடிக்கிறது.

## அதிகார வர்க்கத்தின் 'அறிவு'

பமபாயில் வாழும் பத்திரிகையாளர் நாராயண பிள்ளை மலையாள சிறுகதை எழுத்தாளர். அவர் எழுதிய பரிணாமம் என்ற நாவலை இவ்வாண்டின் பரிசுக்குரிய நாவல் என அறிவித்தது கேரள சாகித்திய அகாடமி. 5,000 ரூபாய் பணமும் பாராட்டுப் பத்திரமும் கொண்ட இப் பரிசைப் பெற்றுக் கொள்ள ஒரு நிபந்தனை விதித்தார் நாராயண பிள்ளை.

''இந்தப் பணம் மக்களின் வரிப்பணம். நான் வசதியாக இருப்பதால் இப்பணம் எனக்குத் தேவையில்லை. ஆகவே பாராட்டுப் பத்திரம் மட்டும் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் பரிசளிப்புக்கு முன்னதாக இப்பணம் அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டு அந்த ரசீது என்னிடம் காண்பிக்கப்பட்ட வேண்டும்'' என்பதுதான் நிபந்தனை.

பரிசு பெறுபவர் அகாடமிக்கு நிபந்தனை விதிக்க முடியாது என ஆத்திரப்பட்டது அகாடமி. பரிசை முழுமையாகத்தான் தர முடியும். அதில் ஒரு பகுதியை மட்டும் தர முடியாது என சட்டம் பேசி பரிசையே ரத்து செய்துவிட்டனர். திமிர் பிடித்த முட்டாள்களின் கூடாரமே அதிகார வர்க்கம் என்பதற்கு இது இன்னுமொரு உதாரணம்.

## ராஜீவ் பெயரைச் சூட்டாதே! மாணவர் போராட்டம்

கோவா மருத்துவக் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டி, ராஜீவ் நினைவு நாளன்று இம் மருத்துவக் கல்லூரிக்கு ராஜீவ் காந்தி மருத்துவக் கல்லூரி என பெயர் சூட்ட கோவா காங்கிரசு அரசு தீர்மானித்திருந்தது. இக் கல்லூரிக்குப் புதிய பெயர் சூட்டவும், ராஜீவ் சிலையைத் திறந்து வைக்கவும் 'குடியரசு' துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் கோவாவின் முற்போக்கு மாணவர் சங்கத்தினர் (PSU) இப்பெயர் மாற்றத்திற்கு எதிராக மாபெரும் கிளர்ச்சியில் இறங்கினர். போபார்ஸ் கொள்ளையன் ராஜீவ் பெயரை சூட்டாதே! ஆசியாவிலேயே தொன்மை வாய்ந்த கோவா மருத்துவக் கல்லூரி என்ற பெயரே நீடிக்க வேண்டும்; புதிய மருந்துக் கொள்கையின் மூலம் மக்களை வதைத்த ராஜீவின் பெயரை வைக்கக் கூடாது என்று போராடினர். முற்போக்கு மாணவர்களின் உறுதியான போராட்டத்தால் கோவா அரசு, பெயர் மாற்ற திட்டத்தைக் கைவிட்டு பின்வாங்கி விட்டது.

## தூர்தர்ஷன் அல்ல துஷ்டதர்ஷன்

ஆனந்த் பட்வர்த்தன், பம்பாயில் வாழும் இவர் இந்தியாவின் சிறந்த சினிமா இயக்குநர், காமிராமேன். மிகச்சிறந்த செய்திப் படங்களைத் தயாரித்து பல சர்வதேச விருதுகளைப் பெற்றவர். அவர் தயாரித்த படம்தான் ''நண்பர்களின் நினைவாக' என்ற படம். இன்று பஞ்சாபில் மத பயங்கரவாதிகள் மற்றும் ராணுவத்தினர் அப்பாவி மக்கள் மீது நடத்தும் அத்துமீறல், அக்கிரமங்களைத் தோலுரித்துக் காட்டும் படம். துணிவுமிக்க சில புரட்சிகர இளைஞர்கள் தங்கள்



சையத் சபுவான் மன்சூர்: அவமானப்படுத்தப்பட்ட மாணவன்

→



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 10
● குரல்: 2,3
● ஜூலை, ஆக '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டுச் சந்தா: ரூ.30

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US $ 8

*படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:*

*சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.*

# கொள்ளையடிப்பது திறமை ஒப்புக்கொள்வது நேர்மை!

வங்கி மோசடி, பங்குச் சந்தை ஊழலின் அளவு என்ன என்பதை மேட்டூர் நீர்மட்டம் போல அன்றாடம் செய்தித் தாட்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இரண்டாயிரம் கோடி என்று தொடங்கி தற்போதைய நிலவரப்படி 3,500 கோடியைக் கடந்துள்ளது. முதலில் ஹர்ஷத் மேத்தா, பிற்கு பூபேன் தலால், பிறகு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் தலைவர்கள், அதிகாரிகள் கடைசியாக ப.சிதம்பரம்... என ஊழலில் சம்பந்தப்பட்டவர்களின் பட்டியலும் வளர்ந்து கொணடே போகிறது. குதூகலமாகத் துள்ளி விளையாடிய பங்குச் சந்தை முடங்கிவிட்டது.

இந்தியப் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஊழல்கள் புதிதல்ல; போபர்ஸ் உள்ளிட்ட பல பகாசுர ஊழல்களின் விசாரணைகள் மீளாவுறக்கத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளன. இந்த ஊழலில் மட்டும் இத்தனை பரபரப்புக்குக் காரணம் இதில் வங்கிகள், அதிகார வர்க்கம், பங்குச் சந்தை, ரிசர்வ் வங்கி, நிதி அமைச்சகம் எதிர்க் கட்சிகள் ஆகிய அனைத்தும் சம்பந்தப்பட்டிருப்பதுதான். மன்மோகன் சிங்கே ஒத்துக் கொண்டபடி இது அமைப்பு முறையின் தோல்வி. சம்பிரதாயமாக கூச்சல் எழுப்பும் எதிர்க் கட்சிகளும்கூட பீதியில் உறைந்திருக்கின்றன என்றும், எவ்வாறேனும் இந்த விவகாரத்தை மூட்டை கட்டுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்றும் முதலாளித்துவ பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன.

விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ள காலத்தில் மட்டும் நடந்துள்ள பத்திர விற்பனையின் மதிப்பு 9 லட்சம் கோடி ரூபாய். இதில் சுமார் 68 சதவீதம் நான்கு அமெரிக்க பிரிட்டிஷ் வங்கிகளால் செய்யப்பட்டுள்ளன. இவை குறித்து ரிசர்வ் வங்கியின் விசாரணை எதற்கும் அவை கட்டுப்பட மறுக்கின்றன. அதுமட்டுமல்ல, முன்னாள் அரசுச் செயலர் கோபி அரோரா முதல் எண்ணற்ற பிற உயரதிகாரிகளின் மகன்களும், மருமகன், மருமகள்களும் இந்த வெளிநாட்டு வங்கிகளில் உயர்பதவியில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இத்தனைக்குப் பிறகும் வெளிநாட்டு வங்கிகளின் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கத் தேவையில்லை என்கிறார் நிதி அமைச்சர்.

தனக்கேயுரிய பாணியில் கைது செய்யப்பட்டோர் பற்றிய பரபரப்பான செய்திகளை வழங்கிக் கொண்டிருக்கிறது மத்திய உளவுத்துறை. ஆனால் குற்றம் சாட்டப்பட்ட ஒரு வங்கி அதிகாரியின் காவல் நீட்டிப்பு பற்றிய மனுவின் மீதான விசாரணையின் போது ''குற்றம் சாட்டப்பட்டவரைத் தப்பிக்க வைக்கும் நோக்கத்துடனேயே சி.பி.ஐ 'புலனாய்வு' நடத்துகிறதா'' என்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஐயமெழுப்பியுள்ளார். இது சி.பி.ஐ-யின் 'நேர்மை'க்கு ஒரு சான்று. இதற்கிடையில் எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்பது போல மன்மோகன் சிங்கை நீக்கிவிட்டு,தமக்கு மிகவும் சாதகமான பிரணாப் முகர்ஜியைக் கொண்டுவர சில தரகு முதலாளிகளின் கைப்பாவைகளான எம்.பி.க்கள் முயல்கின்றனர். கூட்டுப் பாராளுமன்றக் குழு ஊழலை இயன்றவரை மூடிமறைத்து 'சகஜ நிலை'யைக் கொண்டுவரவே முயலும் என்று இப்போது தெளிவாகிவிட்டது.

இத்தனைக்குப் பிறகும் முதலாளித்துவப் பொருளாதாரம் மற்றும் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை ஏற்படுத்தும் கேலிக்குரிய முயற்சிகள் தொடர்கின்றன. சிதம்பரத்தின் நேர்மையை பத்திரிகைகளும், ஓட்டுக் கட்சிகளும் வானளாவப் புகழ்ந்தாலும், அவர் 1 1/2 லட்சம் ரூபாய்க்குத்தான் பங்கு வாங்கியதாகக் கூறுவதைக் கேட்டு பாமரன்கூட எள்ளி நகையாடுகிறான். 700 ரூபாய் மதிப்புள்ள பங்கு சிதம்பரத்துக்கு 10 ரூபாய்க்குக் கிடைத்தது எப்படி என்ற கேள்விக்கு விடையில்லை.

நாடு ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகிறது என்று நரசிம்மராவ் கூறுவது உண்மைதான் ஹர்ஷத் மேத்தா இரண்டு மாதங்கள் முன் மாபெரும் பொருளாதாரப் புலியாக பத்திரிகைகளின் அட்டையை அலங்கரித்தான். அவனிடம் ஆட்டோகிராப் வாங்க ஒரு கூட்டமே அலைமோதுவதை பத்திரிகைகள் உற்சாகமாக வர்ணித்தன. இவையெல்லாம் புதிய பொருளாதாரக் கொள்கையின் பலன் என்றும் பீற்றிக் கொண்டன. இன்றும்கூட ஹர்ஷத் மேத்தா ஒரு கதாநாயகனாகவே சித்தரிக்கப்படுகிறான். ''சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி திறமையாகப் பணம் சம்பாதித்தான்'' என்று மெச்சப்படுகிறான்.

தாங்கள் உருவாக்கிய விதிமுறைகளை தாங்களே மீறுவதையே ஒரு சாதனையாகச் சித்தரித்துக் கொள்கிறது ஆளும் வர்க்கம். '80இல் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் திட்டத்தை அறிவித்தார் இன்றைய ஜனாதிபதி வெங்கட்ராமன். இன்று கறுப்புதான் வெள்ளை என்ற நிலைமை உருவாகியுள்ளது.

செயின்ட் கிட்ஸ் விவகாரத்தில் போர்ஜரி வேலை செய்தவர் பிரதமர்; உலக வங்கியின் கையாள் நிதியமைச்சர்; வெளிநாட்டு வங்கிகளின் நிர்வாகிகள் அதிகார வர்க்கத்தின் குலக்கொழுந்துகள். பிறகென்ன, 1992 இன் நாயகன் ஹர்ஷத் மேத்தா. வரும் ஆண்டுகளில் சாராய உடையாரும், சசிகலா நாகராசனும்கூட இந்தப் பெருமைக்கு முயற்சிக்கலாம். அமெரிக்காவைப் போல திறமையாக சம்பாதித்த முதலாளிகள் 'ஆண்மையாளர்கள்' எனக் கொண்டாடப்படலாம். இந்திய ஆளும் வர்க்கம் சீரழிவின் விளிம்பைத் தொட்டுவிட்டது. இனி அதையே நல்லொழுக்கம் என்று வரையறுப்பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# தில்லை முதல்... அண்ணாமலை நகர் வரை!

மீண்டும் சிலப்பதிகாரம்!

கோவலன் கொலையுண்டான்
கண்ணகி கற்பிழந்தாள்
காவலர்களின் கண்ணுக்கஞ்சி
தலைமறைவாகிவிட்டாள்

சிலம்பின் சுவையூறிய
செல்வர்களே, புலவர்களே
செல்லுங்கள்
காப்பிய நாயகியைக்
கண்டுவாருங்கள்

பட்டிமன்ற நாயனங்களே
புறப்படுங்கள்
'கற்பிழந்த' கண்ணகியைக்
கண்டு வாருங்கள்
கைதட்டலுக்கொரு 'கொசுறு'
கிடைக்கும்

நந்தகுமார் கோவலனில்லை
பத்மினி கண்ணகியுமில்லை
காப்பிய நாயகர்களாகும்
தகுதியும் அவர்க்கில்லை

''யானோ மன்னன்
யானே கள்வன்'' — என்று
செங்கோலுடன் சரிவதற்கு
நெடுஞ்செழியன் இல்லை

நடப்பது
மங்கையர்க்கரசியின் ஆட்சி
''உனது ஆட்சியில் நடக்காததா?''
என்று
'மனு நீதிச் சோழனை' மடக்கும்
மங்கையர்க்கரசின் ஆட்சி

இருப்பினும்
மீண்டும் சிலப்பதிகாரம்

○

நந்தகுமார் யார்?
தெரியாது.
காப்பிய நாயகனில்லை
கட்டிடத் தொழிலாளி



நந்தகுமார்

'இன்னார்' என்று
அடையாளம் காட்டவியலாத
ஒரு செங்கல்.

பத்மினி?
அறியேன்.
காமிராவின்
ஒவ்வொரு மின்னலுக்கும்
கதற நேரும்
அவளது முகம் மட்டுமே
என் சிந்தனையில் உறைந்திருக்கி
றது.

ஜெயராமன்... இப்ராகிம்...
இவர்களது முகம்
எனக்கு முக்கியமில்லை
காக்கி உடுப்பணிந்த மிருகங்கள்
உடுப்பணிந்ததால்
மிருகங்கள்

ஏன் கொன்றார்கள் நந்தகுமாரை?

நந்தகுமார் மீது
அவர்களுக்கென்ன ஆத்திரம்?

''அவன் ஒரு திருடன்''

ஓகோ...
இது திருட்டுக்கெதிராக
காவல் துறையின்
தார்மீக ஆவேசமோ?
பாண்டியன் நெடுஞ்செழியனின்
வாரிசுகள் போலும்!

ஒரு நிரபராதியை,
இறைஞ்சும் கைகளை,
மன்றாடும் கண்களை,
மிதித்துக் கொல்ல
கோபம் வேண்டும்.
தன்னிலை மறந்த வெறி
வேண்டும்.
பிறவிப் பகை வேண்டும்.
உண்டா?

''இல்லை... எனினும்
அவன் கொஞ்சம்
உணர்ச்சி வசப்பட்டுவிட்டான்
அவனது அறிவை
உணர்ச்சி கொன்றுவிட்டது
அப்புறம்தான்
அவன் கொல்லப்பட்டான்''

இருக்கலாம்.
அவன் ஒரு ஏழைத்
தொழிலாளிதானே!
ஏழைகள் அறிவிலும்
ஏழைகள்தான்.

மேலும்
அவன் சாதியில் தாழ்ந்தவன்
அறிவும் குறைவு
திறமையும் குறைவு


படிப்பகம்

www.padippakam.com

போகட்டும்
என்னதான் செய்துவிட்டான்?

அவனுக்கு
சாப்பாடு கொண்டுவந்தாள் —
பத்மினி
அவன் மனைவி

அவளைப் பார்த்தவுடன்
காவலர்களின் கோபம் தணிந்தது
காமம் கிளர்ந்தது.

காவலர்களின் உணர்ச்சியை
அவளாவது மதித்திருக்கலாம்

காமத்தீயில்
அவர்களின் கோபத்தை எரித்து
கொண்டவனை மீட்டிருக்கலாம்

என்ன செய்வது?
பெண்டாட்டிக்கும் அறிவில்லை
புருசனுக்கும் அறிவில்லை

இத்தனைக்கும்
காந்தி படம் அங்கே இருந்தது
அதைப் பார்த்தும்
அவனுக்குப் புத்தி வரவில்லை.

சில நிமிடங்கள் -
சில நிமிடங்கள் மட்டுமே
கண்மூடி, வாய்பொத்தி
காதுகளையும்
அடைத்திருந்தானெனில்
இன்று
பேச்சு மூச்சின்றிக்
கல்லறையில்
கிடக்க நேர்ந்திருக்காது.

உயிரும் போனது
மானமும் போனது
அறிவில்லை -
இருந்திருந்தால்
உயிர் இழப்பைத் தவிர்த்திருக்கலாம்
மானம் போனதை
மறைத்திருக்கலாம்

அறிவின் வலிமையால்
உணர்ச்சியை வென்றிருக்கலாம்''

o

உண்மை. முக்காலும் உண்மை
முகமே சொல்கிறது
அவன் ஒரு ரஜனி ரசிகன்,
விஜயகாந்த் ரசிகன் — அல்லது
எம்ஜியார் ரசிகன்

கற்பழிப்புக் காட்சியில்
தாடைகள் இறுக
நரம்புகள் புடைக்க
கண்கள் சிவக்க
விலங்குகள் தெறிக்க




காக்கி உடுப்பில் ஊடுருவிய
களைகளைப் பிடுங்கி
இறுதிக் காட்சியில்
காவல் அதிகாரியுடன்
கைகுலுக்கலாம் —என்று
கனாக் கண்டிருப்பான்

சொந்தமாய் அறிவில்லை
சொல்லியும் அறிவில்லை
அதென்ன உலகத்திலில்லாத
மானம், கற்பு, மனசாட்சி,, கவுரவம்?
அதுவும்
சாதி கெட்டவளுக்கு!

சேலையை உருவும் போது
பெண் காவலர்கள் இருந்தார்கள்
நிர்வாணமாக ஓடவிட்டபோது
பெண் காவலர்கள் இருந்தார்கள்

பிறகு
அந்தப் பன்றிகள் மேய்ந்ததையும்
பெண் காவலர்கள்

அறிந்திருந்தார்கள்
எதிர்த்தார்களா?
அதிர்ந்தார்களா?
முணுமுணுத்தார்களா
இல்லை.

புரிந்திருக்க வேண்டும்
பத்மினிக்கு.

சேலையைக் காப்பாற்றப்போய்
உடுப்பை இழக்க
அவர்கள் தயாரில்லை.
ஏன்?

தங்களது உடுப்பே
உருவப்பட்டாலும்
உடுப்பை இழக்க
அவர்கள் தயாரில்லை.

உடுப்பைக் காப்பாறிக் கொள்ள
உடுப்பைக் களையலாம்
தோலைக் காப்பாறிக்க கொள்ள
சொரணையை உதிர்க்கலாம்

இது
அவர்களுக்குப் புரிந்திருந்தது —
ஏனெனில்
அவர்களுக்கு அறிவு
இருந்தது.

இது அறிவின் யுகம்
உணர்ச்சிகள் வேண்டுவோர்
காவியத்தில் தேடலாம்
கதையில் தேடலாம்
கற்பனையில் மூழ்கலாம்

ஆனால்
பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை
பொருளே அறிவு
அறிவே பொருள்

அரிசி துவரை சோம்புக்கும்
அன்னையின் அரவணைப்புக்கும்
காதல் மயக்கத்திற்கும்
கற்புக்கும்
மானத்துக்கும்
படிக்கல் ஒன்றேதான்!

கல்பனா சுமதியின்
மானத்துக்கு —20,000

காவியத் தலைவியின்
மானத்துக்கு —முதல்வர் பதவி.

பத்மினிக்கு

படிப்பகம்

www.padippakam.com

புரியாமல் போயிருக்கலாம்
படித்தவர்களுக்குப் புரியும்
அறிவாளிகளின் மவுனத்திற்கும்
'பொருள்' உண்டு.

சட்டம் தன் கடமையைச் செய்யும்

ஒரு நாயைக் கொல்வதென்றாலும்
முறைப்படி
விசாரித்துத்தான் செய்யமுடியும்
இது நம் மரபு.

ஐந்து நாய்கள்
சம்பந்தப்பட்டிருப்பதால்
அவசரப்பட முடியாது

கற்பழிக்கப்பட்டது உண்மையா?
அழிப்பதற்கு அவளிடம்
கற்பு இருந்ததா?
ஐந்து பேர் அழித்ததற்கு
ஆதாரம் உண்டா?
கண்ணால் கண்ட குற்றவாளிகள்-
மன்னிக்கவும் —சாட்சிகள்
உண்டா?

பொறுமையாக
நிதானமாக
நெறி பிறழாமல்
விசாரிக்க வேண்டும்

பாண்டியன் நெடுஞ்செழியன்போல
பதட்டப்பட முடியாது

மாயாதியாகி காத்திருக்கவில்லையா
கல்பனா சுமதி
காத்திருக்கவில்லையா
மதுரா காத்திருக்கவில்லையா
பத்மினிக்கு மட்டுமென்ன
அவசரம்?

○

குற்றம் சாட்டப்பட்டவர்கள்
வெறும்
குடிமக்களல்ல -
குடிமக்கள் நலம்பேணும்
காவலர்கள்.

குற்றம் நடந்த இடமும்
மதுரை அல்ல —தில்லை.
காலைத் தூ...க்கி நின்று
அம்பலவாணன் களிநடம் புரியும்
அம்பலம்.

அது அழுகுணியாட்டம் என்று
அவன் மனைவி
சிவகாமி தொடுத்த வழக்கே
இன்னும் விசாரித்து முடியவில்லை

ஆடிய பாதத்தின் கீழே
நசுங்கிய
அரக்கப்பயல் முயலகன் கொடுத்த
வழக்கொன்று



சட்டம் தன் கடமையைச்
செய்யும்
ஒரு நாயைக்
கொல்வதென்றாலும்
முறைப்படி
விசாரித்துத்தான்
செய்யமுடியும்
இது நம் மரபு.
ஐந்து நாய்கள்
சம்பந்தப்பட்டிருப்பதால்
அவசரப்பட முடியாது.

ஆயிரமாண்டுகளாய்ப்
பைசலாகவில்லை.

தூக்கிய திருவடிமீது ஒரு வழக்கு
ஊன்றிய திருவடிமீது ஒரு வழக்கு

ஆனந்த தாண்டவத்திற்கு
மத்தளமடித்த நந்திதேவன்,
தாளலயத்தை
நாட்டியசாத்திரமாக்கிய
பரதமுனி,
இலக்கணமெழுதிய பாணினி
இவர்களே சாட்சிகள்.

காலைத் தூக்கியது உண்மையா
காலால் மிதித்தது உண்மையா
அவர்களிடம் விசாரிக்க வேண்டும்.

அவசரப்பட முடியாது.

குற்றம் சாட்டப்பட்டவன்
குப்பனல்ல
ஆக்கல் காத்தல் அழித்தலைத் தன்
ஆட்டத்தில் நிகழ்த்திய அப்பன்-
அம்பலவாணன்

குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள்
சாதாரண குடிமக்களல்ல
காத்தல் தொழிலின் நாயகர்கள் -
காவலர்கள்

அரக்கன் அலறலை நம்பி
அம்பல நடையை மூடமுடியாது
பத்மினியின் அரற்றல் கேட்டு
காவலரைச் சிறையிட முடியாது

இதுவே நமது மரபு

இதுவே நமது நீதி

○

ஆணென்றால் மிதி
பெண்ணென்றால் அவமதி
இதுதான் மரபு
இதுதானே நியாயம்?

அதிகாரத்தின் கால்கள்
ஊன்றி நிற்கும் வரைதான்
ஆணவத்தின் கால்கள்
அழுகுணி ஆட்டம் ஆடும்
இதுவே சிதம்பர ரகசியம்

ஊன்றிய திருவடியை
வெட்டி எறி
உயர்த்திய திருவடி
துவண்டு விழும்

அழகியலின் சின்னம்
ஆணவத்தின்
நினைவுச் சின்னமாகட்டும்
அம்பலவாணனுக்கு மட்டுமல்ல
அண்ணாமலை நகர் நாய்களுக்கும்
இதுவே தீர்ப்பு

காலொடிந்த நாய்களின்
ஊளைச் சத்தம்
கடிக்க வரும் நாய்களுக்குப்
பாடமாக இருக்கட்டும்.

○

''இது பயங்கரவாதம்''

இல்லை. இலக்கிய நியாயம்

''என்ன இலக்கியம்
தீவிரவாத இலக்கியமோ?''
சிலப்பதிகாரம்

''முட்டாளே
முலையைத் திருகியெறிந்தால்
நகரம் மூண்டெரியுமா?''

அது முலையல்ல
கவிஞனின் கோபம்!
மந்திரிப் பிரதானியரையும்
நெடுமரமாய் நின்ற மக்களையும்
எரிக்க நிமிர்ந்த
கவிஞனின் கோபம்!

''என்றால்
இளங்கோவைத் தூக்கிலிடுவோம்''

அவன் செத்துவிட்டான்

''எனில் சிலப்பதிகாரத்தைத் தடை
செய்வோம்!''

●

மருதையன்

அட்டை ஓவியம்: மருது


படிப்பகம்

www.padippakam.com

# எது உலகம்?

'நீ என்ன உலகம் தெரியாத ஆளாயிருக்கியே!' என்பார்கள். அறிவை வளர்க்காமல் முட்டாளாகவே வளருகிறாயே என்று அதற்குப் பொருள். உலகத்தைத் தெரிந்து கொள்ள யாருக்குத்தான் ஆசையிருக்காது; அந்த ஆசை உனக்கும் உண்டு, எனக்கும் உண்டு. ஆனால், தமிழ்ப் பத்திரிகைகள், அறிமுகப்படுத்துகிற உலகச் செய்திகளைப் படிக்கும் போது மறுபடி சந்தேகம் வந்துவிடுகிறது. எது அறிவு? எது உலகச் செய்தி? எது உலகம்?

ஆனந்த விகடனில் (21.6.92)-ல் ஒரு அட்டைப் படக் கட்டுரை: 'விவாகரத்தை நோக்கி - சார்லஸ் - டயானா, அன்று... இன்று.' சார்லஸ் - இங்கிலாந்து அரச குடும்பத்தின் இளங் கொழுந்து. அவரது அண்ணனின் திருமணம், மணமுறிவு, சார்லஸின் குடும்பத்திலும் எட்டிப் பார்க்கும் மணமுறிவு, அன்று உலகையே அசத்திய அவர் திருமணம், பிறகு அந்த குடும்பத்தில் நடந்த ஊடல், சண்டைகள், யார் எதெற்குக் காரணம் என்றெல்லாம் புட்டுப்புட்டு ஆனந்த விகடன் மாமா எழுதுகிறது. இந்தப் பிரச்சனை தீரவில்லையானால் உலகமே அழிந்து போய்விடுமென்பது போல யார்மீது தவறென்பதற்கு படிப்பவரைத் தீர்ப்பு எழுதச் சொல்கிறது ஆனந்த விகடன்.

இந்திய ஏழையின் கட்டிய கோவணமே காற்றில் பறக்கிறது; ஆனால் பக்கிங்ஹாம் ராஜாங்க அரண்மனை அந்தப்புரத்தை நோக்கி புயல்வீச ஆரம்பித்துவிட்டதே என்று பதறுகிறது விகடன்.

சார்லஸ் ஆராதனையை விகடன் தொடர்ந்து நடத்துகிறது. பிப்ரவரியில் இந்தியாவுக்கு இதே 'தம்பதிகள்' வந்திருந்தார்கள். அப்போது டயானா மட்டும் தாஜ்மகால் பார்க்கச்சென்று சொக்கியது முதல், ஜெய்ப்பூரில் டயானாவுக்கு சார்லஸ் முத்தம் தர முயன்று தோற்றது, பெங்களூர் நட்சத்திர ஓட்டலில் மணக்க மணக்க பக்கோடா, சமோசா சாப்பிட்டது வரை விரிவாக எழுதியது விகடன். விகடனுக்கு இருப்பது வெறும் விசுவாசம் அல்ல, ஊன் கலந்து உயிர்கலந்து இருக்கும் பக்தி.

இங்கிலாந்து விவகாரம் மட்டுமல்ல, 21.6.92 விகடன் இதழ் முழுவதும் ஃபாரின் நெடி அதிகம். அமெரிக்க தேர்தலில் திருப்பம், அயர்லாந்தில் ஒரு பாதிரியாரின் காதல், வழக்கமான கின்னஸ் கிறுக்குத்தனங்கள் எல்லாம் சேர்த்து ஒரு மூட்டைச் சரக்குகள். 'எல்லாம் ஒரு சேஞ்சுக்காகத்தான்' என்று ஓர் அறிவிப்பையும் சேர்த்து எழுதியுள்ளது விகடன். வழக்கமாக வருவதெல்லாம் 'போர்' அடிக்கும், அதனால் மாறுதலுக்காக இப்படிச் செய்கிறது விகடன் என்று வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டுமாம்.

விகடன், குமுதம், தமிழரசி, ஜூ.வி, ஜூ.போ, தேவி, ராணி மட்டுமல்லாமல் துணுக்குகளுக்கென்றே வரும் கல்கண்டு, முத்தாரம், சூப்பர் நியூஸ் ஏடுகளும் லட்சக்கணக்கான ஃபாரின் செய்திகளை அள்ளி அள்ளி ஊற்றுகின்றன. சார்லஸ் - டயானா விவகாரம் போலவே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீதம் அரசியல் - தனிமனித அந்தரங்க வாழ்க்கை கிசுகிசுக்கள், கிறுக்குத்தனங்கள் பாலியல் வக்கிரங்கள்.

முதல் அம்சம் பழைய அடிமைப்புத்தியை மீண்டும் வளர்ப்பதற்காக; இரண்டாம் அம்சம் மேல்நாட்டு (குறிப்பாக, அமெரிக்க) வாழ்க்கை முறையைப் பழக்கப்படுத்துவதற்காக மேல்நாடுகளில் சமூக குடும்ப வாழ்க்கையில் என்னென்ன பிரச்சனைகள் என்று விமரிசனபூர்வமாகப் பார்க்கக் கற்றுத் தருவது இவர்களது நோக்கம் அல்ல. மேல்நாட்டுக் குடும்பங்களில் ஏற்பட்டுவரும் விபரீதமான சீரழிவுகளையே வருணித்து எழுதுகிறார்கள். பாக்சிங் புயல் மைக்டைசன் 18 வயது டிசிரி வாஷிங்டனைக் கற்பழித்த சம்பவத்தையும், நீதிபதி தனது கீழ்த்தரமான நடத்தையால் எப்படி அமெரிக்க உயர்நீதிமன்ற நியமனத்தை பறிகொடுத்தார் என்ற சம்பவத்தையும் அக்கு அக்காக எழுதுகிறார்கள்.

ஜூனியர் விகடன் மைக்டைசன் கட்டுரையில் அவரது படத்தின் அருகே, பெரிய எழுத்தில் ஒரு மேற்கோளும் போட்டது. 'பெண்களை படுக்கையறைக்கு இழுத்துச் சென்று அனுபவித்த பிறகுதான் சுயநினைவே வரும்' -பத்திரிகையை வாங்கி அந்தப் பக்கத்தைப் புரட்டுபவர்களைக் கவர்ந்து இழுப்பதற்கான 'டெக்னிக்' இது. 'சிவப்பு விளக்குப்' பகுதியில் பெட்டி போன்ற அறைகளின் வாசலில் நின்று கூப்பிடும் விபச்சாரிகளுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

இது அவசர யுகம் - வேகமான யுகம் - அதாவது மேற்கத்திய முதலாளிகளின் சரக்குகளை விளம்பரம் செய்ய எல்லாவற்றிலும் புரட்சி என்ற ஒரு அடைச்சொல்லைப் பயன்படுத்தி நிஜமான புரட்சியைக் கேவலப்படுத்தும் இந்திய மறு அடிமை யுகம். சாட்சி; முத்தாரம், குமுதம்.



டயானா-சார்லஸ்

புகழ் பெற்ற கிறுக்குத்தனங்கள் (முத்தாரம்): ஆங்கில இலக்கிய மேதை டாக்டர் ஜான்சன் உலாவச் செல்லும்போது வழியில் உள்ள கம்பங்களைத் தட்டிக் கொண்டே செல்வார்; ஒரு குறிப்பிட்ட சந்தில் நுழைந்தால் மரணம் நிச்சயம் என்று சோதிடர் சொன்னதால் அதில் நுழையவே மாட்டார்; எழுத்தாளர் சார்லஸ் டிக்கன்ஸ் வடக்குப் பக்கம் தலைவைத்துப் படுக்கவே மாட்டார்; படுத்தால் மரணம் என்று அவர் நம்பினார்; ஆங்கிலக் கவிஞர் ஷெலேவுக்கு காய்ந்த ரொட்டித் துண்டு என்றால் உயிர், அதை மென்று கொண்டே எழுதுவார்; அதையே குறிதவறாது மற்றவர்மீது அடித்து விட்டுச் சிரிப்பார்.

— ஜான்சன், டிக்கன்ஸ், ஷெலே என்ன எழுதினார்கள், அதன் கதை, வரிகள், நோக்கம், விளைவு எதையுமே வாசகர் தெரிந்து கொள்ள முடியாது. ஏற்கனவே உங்களிடம் உள்ள இந்தியப் பாரம்பரிய(?) கிறுக்குத்தனங்கள் இருந்தால் அவற்றோடு ஃபாரின் கிறுக்குகளையும் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

மலடியைத் தாயாக்கும் அதிசய இங்கிலாந்து நாற்காலி - (ஆனந்த விகடன்): இதில் அமர்ந்தால் மலடிகளுக்குக் குழந்தைகள் பிறக்கிறதாம். —இந்த மூடநம்பிக்கையை விளக்கமாக எழுதுகிறது விகடன்; அரச மரத்தில் தொட்டில், வண்ண வண்ணக் கயிறுகள், கிழிந்த புடவைத் துணி கட்டினால், அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை பிறக்கும் என்று இங்கே ஏற்கெனவே உள்ள மூடநம்பிக்கைக்கு உரமூட்ட மேல்நாட்டில் உள்ள மூடநம்பிக்கைகளைச் சேர்க்கிறது.

'இதையெல்லாம் தற்செயல் என்றா சொல்வது?' (குமுதம்): தற்செயலாக இணைப்பு ஏற்படும் சம்பவங்களாக விவரித்துவிட்டு, இதையெல்லாம் அப்படிச் சொல்ல முடியாது என்று பொடிவைத்து எழுதியுள்ளது. அமெரிக்க, இங்கிலாந்து சம்பவங்களை (!?) தொகுத்து வெளியிட்ட 'இன்க்ரெடிபிள் கோ - இன்சிடென்ஸ்' என்ற நூலிலிருந்து எடுத்து எழுதியிருக்கிறது.

இப்படி நிறைய வருகின்றன - நீங்களும் படித்திருப்பீர்கள் அல்லது ஆவலாக 'இன்று ஒரு தகவல்' போல எங்காவது கேள்விப்பட்டிருப்பீர்கள். இது உலகம் இல்லையா? இது உலகச் செய்தி இல்லையா? இல்லை. உலகச் செய்திகள் என்பது அங்கங்கே நடப்பவற்றை விமர்சனப் பார்வையோடு பார்த்து பகுத்தறிவுள்ள உலகை ஆக்கப் பயன்படுமாறு தொகுக்கப்பட வேண்டும். உலக மக்களின் வாழ்க்கைச் சாரம் அதில் இருக்க வேண்டும். அவை லிம்கா, தம்ஸ் அப், கோல்டு - ஸ்பாட்டுகளாக, பழத்தின் சுளை, சாறு இல்லாத போலிகளாக இருக்கக் கூடாது. மேற்படிச் சரக்குகள் அப்படித்தான் இருக்கின்றன.

இதிலிருந்து முதலாளிகளின் பிற்போக்கான, மூடத்தனமான, அடிமைப் புத்தி வளர்க்கும் உலகத்தைத்தான் தெரிந்து கொள்ள முடியும். இவற்றை வேண்டாம் என்று உதறி எறிவதே அறிவு. அதுவே புது உலகுக்கான திறவுகோல். ●

படிப்பகம்

www.padippakam.com

# பார்சிலோனா ஒலிம்பிக்:
# ஸ்பெயினின் ஐரோப்பியக் கனவு!

**ஊழல், பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதல், போதை மருந்து பிரச்சினை, வறுமை, வேலையின்மை, தேசிய இனங்களின் போராட்டம் ஆகிய எல்லாவற்றிலும் இந்தியாவுடன் போட்டிபோடுகிறது ஸ்பெயின். தொலைக் காட்சியில் நாம் காணவிருக்கும் ஒலிம்பிக்கில் வர்ணஜாலங்களுக்குப் பின்னால் மறைக்கப்பட்டிருக்கும் அவலங்கள் ஏராளம்.**

நூற்றுக் கணக்கான செயற்கை நீரூற்றுக்கள் வண்ண விளக்குகளின் ஒளியில் பொங்கி வழிகின்றன. புத்தம் புதிதாக நட்டு வளர்க்கப்பட்ட லட்சக்கணக்கான மரங்கள் காற்றில் மெல்லத் தலைய சைக்கின்றன. அவ்வப்போது குளிப்பாட்டப்படும் அவற்றின் இலைகளில் நிற்கும் நீர்த்திவிலைகள் புத்துணர்ச்சியைத் தூண்டுகின்றன. 96 பிரம்மாண்டமான நட்சத்திர உணவு விடுதிகள், கேளிக்கை நிலையங்கள், கடைகள், இன்னபிற புதுமைகள்... இது புதிய ஸ்பெயின். ஜூலை மூன்றாவது வாரத்தில் துவங்கவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்காகப் பிறப்பெடுத்திருக்கும் புதிய ஸ்பெயின், ஒலிம்பிக் மட்டுமல்ல எக்ஸ்போ '92 பொருட்காட்சியும் சேர்ந்து நடைபெறுவதால் 'குதூகலம்' சற்று அதிகமாகவே இருக்கிறது.

இந்த புதிய ஸ்பெயினிலிருந்து கூப்பிடு தூரத்தில், குழாயடியில் குடிதண்ணீருக்காக சுமார் 500 பேர் மோதிக் கொண்டிருக்கிறார்கள். நகரமே குப்பை மேட்டைப்போல நாறுகிறது. பிளைவுட் துண்டுகளாலும், அட்டைப் பெட்டிகளாலும், கந்தல் போர்வைகளாலும் உருவாக்கப்பட்ட 'வீடுகளின்' சொந்தக்காரர்கள் எலித் தொல்லையிலிருந்து தப்புவது எப்படி என்று கவலையுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ''எலிகள் எங்களை கொஞ்சம் கொஞ்சமாகத் தின்கின்றன'' என்று முறையிடுகிறாள் ஒரு தாய்; அவள் அருகில் புண்ணில் வடியும் சீழுடன் அவளது 8 வயது மகள். கந்தல் உடைகளுடனும் வெறுங்கால்களுடனும், உதட்டோரங்களில் புண்ணுடனும் குழந்தைகள். குடிநீர் இல்லை, கழிவறை இல்லை; சமையலும்கூட திறந்த வெளியில்தான்.

இது பழைய ஸ்பெயின். சர்வதேச பொருட்காட்சிக்காகத் தங்கள் சொந்த வீடுகளிலிருந்து பந்தாடப்பட்டவர்கள் இந்த மக்கள். சர்வதேசப் பொருட் காட்சியின்போது உலகத்தவரின் கண்ணில் படாமல் ஒளித்து வைக்கப்பட்டவர்கள் இவர்கள்.

இத்தகைய வறுமையில் வாடும் ஸ்பெயின் பல ஆயிரம் கோடி செலவு செய்து ஒலிம்பிக் விளையாட்டையும், எக்ஸ்போ '92 பொருட் காட்சியையும் ஏன் நடத்த வேண்டும்? ''நவநாகரீகமான, முன்னேறிய ஸ்பெயினை உலகுக்குக் காட்டுவதற்குத் தான்'' என்கிறார் எக்ஸ்போ பொருட் காட்சிக்கென்றே நியமிக்கப்பட்டிருக்கும் அமைச்சர் சபாடெரோ.

ஐரோப்பாவின் மூன்றாம் உலகம் என்று கேலியாக அழைக்கப்படும் ஏழை நாடான ஸ்பெயின் 1975 வரை பாசிஸ்டு சர்வாதிகாரி பிராங்கோவின் ஆட்சியின் கீழ் சிக்கித் தவித்தது. பிராங்கோவின் மரணத்திற்குப்பின் 'சோசலிச'க் கட்சிதான் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி நடத்துகிறது. அதன் பிரதமர் பிலிப் கன்சால்வேஸ்

கடந்த பத்தாண்டுகளில் தானும் ஒரு ஐரோப்பியப் பணக்கார நாடாகிவிட வேண்டும் என்ற வெறியில் ஐரோப்பிய பகாசுரக் கம்பெனிகளுக்கு ரத்தினக் கம்பளம் விரித்தது கன்சால்வேஸ் அரசு. ஆனால் இன்று எல்லாத் தொழில்களையுமே ஐரோப்பிய நிறுவனங்கள் விழுங்கி விடுமோ என்று ஸ்பானிய முதலாளிகள் அஞ்சி நடுங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

''ஏழைகளின் அழிவில் எழுந்ததுதான் எக்ஸ்போ'' என்று பொருமுகிறார் மனித உரிமைக் கழக உறுப்பினர் ஒருவர் சமூக நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளனைத்தையும் ரத்து செய்து அலங்கார நகரம் கட்டியது மட்டுமல்ல, விலைவாசியையும் இரண்டு மடங்காக உயர்த்திவிட்டது எக்ஸ்போவும் ஒலிம்பிக்கும்.

''ஒலிம்பிக்கிற்காக ஒவ்வொரு குடிமகனும் 13,200 ரூபாய் கூடுதலாக வரி கொடுக்க வேண்டும்'' என்று எச்சரிக்கிறது ஒரு பத்திரிகையின் தலைப்புச் செய்தி. ''எக்ஸ்போ-92 வேலையின்மை-93'' ''வாக்குறுதிகள் வேண்டாம் - தீர்வுகள் வேண்டும்'' என்று சுவரெழுத்துக்கள் பளிச்சிடுகின்றன.

ஆனால் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தனது டாம்பீகத்தைத் தொடர்கிறது 'சோசலிஸ்டு' அரசு. 70 அடி குறுக்களவுள்ள மாபெரும் சட்டியில் சமைத்து எக்ஸ்போவிற்கு வரும் விருந்தினர்கள் ஒரு லட்சம் பேருக்கு உணவளிக்கப் போவதாக ஜம்பமடிக்கிறார் செவில் நகர மேயர். இது கின்னஸ் சாதனையில் வேறு இடம் பிடிக்கப் போகிறதாம். இச் செய்தி ஜெயலலிதாவின் காதில் விழாதது துரதிருஷ்டம்!

○ ● ○

ஸ்பெயினின் தலைநகரம் 'மாட்ரிட்'டுக்கு அடுத்த பெரிய நகரமான பார்சிலோனாவில் ஜூலை 25 முதல் துவங்கவிருக்கின்றன ஒலிம்பிக் போட்டிகள். கூடவே செவில் நகரில் எக்ஸ்போ எனும் சர்வதேசப் பொருட்காட்சியும் நடக்கவுள்ளது. பரபரப்பூட்டும் விளையாட்டுப் போட்டிகளையும், கண்களை விரியச்செய்யும் பொருட்காசியையும் வானொளியில் நாம் காணவிருக்கிறோம்.

ஊழல், பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல், போதை மருந்து பிரச்சினை, வறுமை, வேலையின்மை, தேசிய இனங்களின் போராட்டம் என்று எல்லா




ஸ்பெயினை உலுக்கிய சுரங்கத் தொழிலாளர் போராட்டம்!

''ஸ்பெயின் ஒரே இன நாடு அல்ல; அதன் பண்பாடும் ஒன்றல்ல. எனவே மையக் கலாச்சார அமைச்சகத்தை இழுத்துமூடு'' என்று பல தேசிய இனங்கள் குரல் கொடுக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

வகையிலும் இந்தியாவுடன் போட்டி போடு கிறது ஸ்பெயின். 2,000 கோடி ரூபாய் செல வில் ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்தி இந்தியாவையும் உலகையும் திசைதிருப்பிய இந்திரா காந்தியைப் போலவே முயல்கிறார் ஸ்பெயின் பிரதமர் பிலிப் கன்சால்வேஸ். தொலைக் காட்சியில் நாம் காணவிருக்கும் வர்ண ஜாலங்களுக்குப் பின்னால் மறைக்கப் பட்டிருக்கும் அவலங்கள் ஏராளம்.

கடந்த சில மாதங்களில் மட்டுமே ஸ்பெயினில் தொழிலாளர் போராட்டங்கள் பெருமளவு அதிகரித்துள்ளன. 8 வாரங்கள் தொடர்ந்த பஸ் தொழிலாளர் வேலை நிறுத் தம் தலைநகர் மாட்ரிட்டை ஸ்தம்பிக்கச் செய் தது; பாஸ்க் நகரைச் சேர்ந்த இரும்பு எஃகுத் தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தை ஒடுக்க முனைந்த போலீசின் மீது ராக்கெட்டு களை ஏவினார்கள்; விவசாயிகளோ டிராக் டர்களைக் கொண்டு சாலைமறியல் நடத்தி னார்கள்; தலைநகரின் 20,000 துப்புறவுப் பணியாளர்கள் 3 வார வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் ஊரே நாறிப்போய் பள்ளிக ளுக்கெல்லாம் விடுமுறை விடப்பட்டது. வேலையற்றோருக்கான உதவித் தொகை வெட்டப்பட்டதை எதிர்த்து நாடு தழுவிய வேலைநிறுத்தம் செய்யப் போவதாக தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

உள்நாட்டு நிலக்கரிச் சுரங்கங்களை இழுத்து மூடிவிட்டு போலந்திலிருந்து நிலக் கரி இறக்குமதி செய்வதை எதிர்த்து சுரங்கத் தொழிலாளர்கள் நடத்திய 500 கி.மீ. நடை பயணத்திற்கு எல்லா தரப்பு மக்களும் பேரா தரவு கொடுத்துள்ளனர்.

''ஸ்பெயின் ஒரே இன நாடு அல்ல; அதன் பண்பாடும் ஒன்றல்ல; எனவே மைய கலாச்சார அமைச்சரவையை இழுத்து மூடு'' என்று பல தேசிய இனங்கள் குரல் கொடுக் கின்றன. சுயாட்சி பெற்ற 17 பிராந்தியங்க ளின் கூட்டரசான ஸ்பெயினில் தொலைக் காட்சி, கல்வி, போலீசு ஆகியவை அந்தந்த இனங்களால் தனித்தனியே நிர்வகிக்கப்படு கின்றன. ஐரோப்பா ஒரே நாடாக மாறும் போது, ஸ்பெயினின் உறுப்பு என்றில்லாமல் தனியே தாங்கள் இணைய விரும்புவதாக வும் அறிவித்துள்ளன.

ஒலிம்பிக் மற்றும் எக்ஸ்போவில் தங் கள் கொடி தனியே பறக்கவிடப்பட வேண் டும் என்றும் கோரியுள்ளனர். பாஸ்க் இனப் பேராளிகளுக்கும் போலீசுக்கும் ஆயுத மோதல்களோ அதிகரித்த வண்ணம் உள் ளன.

இவையனைத்தையும்விட ஸ்பெயின் மக்களை துன்பத்திலாழ்த்தும் பிரதான விச யம் போதை மருந்துப் பிரச்சினைதான். தென் அமெரிக்காவின் கொகேய்ன், வட ஆப்பிரிக்காவின் ஹஷீஷ், மத்திய கிழக்கின் ஹெராயின் - ஆகியவற்றின் புகலிடமாகி விட்டது ஸ்பெயின். உலகின் மிகப்பெரும் போதை மருந்து கடத்தல் கும்பலான மெடல் லின் கார்ட்டல் ஸ்பானிய அதிகார வர்க்கத் தில் கணிசமான கையாட்களை வைத்திருக்கி




ஸ்பெயின்: போதைப் பொருள் எதிர்ப்பு சுவரெழுத்துக்கள்

றது.

''எங்கள் குழந்தைகளை ரொட்டி வாங்க வெளியே அனுப்பினால் காசைத் திருடிவிடுகின்றனர்; போதை அடிமைகள் கையில் ஊசியுடன் தெருவெங்கும் திரிகின்ற னர்; விபச்சாரிகளோ சுதந்திரமாக உலா வரு கின்றனர்'' என்று தாய்மார்கள் கதறுகின்ற னர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பெற்றோர்களும் குழந்தைகளுமாகத் தெரு வில் இறங்கி போதைமருந்து வியாபாரிக ளின் வீடுகளின் முன்னே ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். மக்கள் கூட்டம் சிறிது சிறிதாக அதிகரித்து ஆயிரக்கணக்கி லானவுடன் சாலைமறியல் தொடங்கியது. இச் செய்தி தொலைக் காட்சியில் வந்தவு டனே தலைநகர் மாட்ரிட், பார்சிலோனா, மற்றும் பிற நகர மக்களும் இதே வடிவத்தில் போராடத் தொடங்கினர்.

போதை மருந்து வியாபாரிகளை ஒழிக்க வக்கற்ற அரசு ஆர்ப்பாட்டக் காரர்க ளைத் தாக்கியது. போலீசு அடக்குமுறைக் கெதிராக மீண்டும் கிளர்ச்சிகள் வெடிக்கவே அரசு மக்களிடம் மன்னிப்புக் கோரியது.



போதை மருந்து விற்பனையைத் தடுக்கும் பெயரில் அரசு கொண்டு வந்துள்ள சட்டங் கள் விசாரணையின்றி யாரையும் கைது செய் யவும் சோதனை போடவும் போலீசுக்கு உரி மையளிக்கின்றன; நம் நாட்டைப் போலவே அங்கும் இது துஷ்பிரயோகம் செய்யத்தான் பயன்படுகிறது.

ஊழல்களை அம்பலப்படுத்தும் பத்திரி கைகளை மிரட்ட ராஜீவ் கொண்டு வந்த தைப் போன்ற ''அவதூறு தடைச் சட்டம்'' கொண்டுவரவும் ''வேலை நிறுத்தத் தடைச் சட்டம்'' கொண்டுவரவும் முயல்கிறது கன் சால்வேஸ் அரசு. பாசிச சர்வாதிகாரி பிராங் கோவின் பாதையில்தான் இந்த அரசும் செய் கிறது என்று குற்றம் சாட்டுகின்றனர் பத்திரி கையாளர்கள்.

மற்றெல்லா விஷயங்களையும் போலவே, மனிதனின் ஆற்றலையும் தோழ மையுணர்வையும் வெளிப்படுத்தும் விளை யாட்டுகளையும்கூட ஆளும் வர்க்கங்கள் தங்கள் குறுகிய நோக்கங்களுக்குத்தான் பயன்படுத்துகின்றன. ஒலிம்பிக் அதற்கு விதிவிலக்கல்ல. 1936 பெர்லின் ஒலிம்பிக் போட்டியில் ஆரியர்கள் மட்டுமே அனைத்து விளையாட்டுகளிலும் வெற்றி பெற முடியுமென கனாக்கண்டதுடன் பகிரங் கமாக அறிவிக்கவும் செய்தான் இட்லர். இட் லரின் கனவுகளை ஓவன்ஸ் என்ற அமெ ரிக்க கறுப்பினத் தொழிலாளி தகர்த்தெறிந் தான்.

மாபெரும் ஐரோப்பிய ஏகாதிபத்திய சாம்ராச்சியத்தில் இரண்டறக் கலப்ப தொன்றே கன்சால்வேஸ் நடத்தும் பார்சி லோனா ஒலிம்பிக்கின் லட்சியம். இந்த லட் சியம் ஒலிம்பிக் விளையாட்டரங்கத்திற் குள்ளே முறியடிக்கப்படக் கூடியதல்ல. இதற்கான போராட்டம் ஸ்பெயினின் வீதிக ளில்தான் நடக்க வேண்டும். ஒருவேளை ஒலிம்பிக் விளையாட்டுகள் முடிந்தபின் அவை தொடங்கக்கூடும்.

● அஜித்

படிப்பகம்

www.padippakam.com



★ ஜெயலலிதா ஆட்சியின் மீது மக்களிடையே பரவிவரும் அதிருப்தி, சரிந்துவரும் செல்வாக்கு ஆகியவற்றைச் சரிக்கட்டுவதற்காக நடத்தப்பட்டது.

★ காங்கிரசின் ஆதரவை நம்பி, தான் அரசியல் நடத்தவில்லை, தனக்கென்று தனிப்பெரும் செல்வாக்கு இருக்கிறது என்பதை டெல்லிக்கு எடுத்துக் காட்டுவதற்கு நடத்தப்பட்டது.

★ ஜெயலலிவுக்கு என்று செல்வாக்கு எதுவும் இல்லை, எல்லாம் எம்.ஜி.ஆரின் வாரிசு என்கிறமுறையில் தரப்படும் ஆதரவு என்பதை மறுத்து, தனக்கென்று சொந்த பலம் இருப்பதை நிரூபிப்பதற்காக நடத்தப்பட்டது.

— இப்படி எவ்வளவோ விளக்கங்களும், கணிப்புகளும் கூறப்படுகின்றன. இவற்றில் எல்லாம் ஓரளவுதான் உண்மை இருக்கிறது. இவற்றைவிட முக்கியமாக, தமிழ்நாடே தனது காலடியில்தான் என்று காட்டுவதற்காக இட்லரின் கோயபல்சு பாணியில் பெரும் பிரச்சாரத்துக்காகவே இந்த மாநாட்டை நடத்தியுள்ளார்.

# ஜெயலலிதா மாநாடு:
# கட்-அவுட்டுகள் கொடும்பாவிகளாகும்!

மதுரை அ.இ.அ.தி.மு.க.-வின், ''வீர வரலாற்றின் வெற்றி மாநாடு' இந்தியாவில் மட்டுமல்லாது, உலகிலேயே, எப்போதும், வேறு எந்த அரசியல் கட்சியும் இதுவரை நடத்தாத (கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும் வகையிலான) சாதனையாக அமையும் என்று அதற்குப் பொறுப்பேற்ற அமைச்சர்கள் சொன்னார்கள். 5 லட்சம் பேரைத் திரட்டி 50 லட்சம் பேர் என்று சொல்லி ஒரு நாடகமும் நடத்திக் காட்டிவிட்டனர்.

இந்த மாநாட்டின் மூன்று முக்கி அம்சங்கள்: பல லட்சம் மக்களைத் திரட்டிப் பிரம்மாண்டமான பேரணி நடத்துவது; ராட்சத ''கட் - அவுட்''கள், சுவரொட்டி - சுவரெழுத்துக்கள், பலூன்கள் என்ற விளம்பரத்தால் வியப்பில் ஆழ்த்துவது; ஜெயலலிதாவின் பிறப்பு, வளர்ப்பு வாழ்க்கைதான் திராவிட இயக்கத்தின் வீரவரலாறு என்று வித்தியாசமாக கண்காட்சி அமைப்பது. இவை தவிர மாநாட்டுத் தீர்மானங்கள், கருத்தரங்கம், கவியரங்கம், சிற்றுரை, பேருரை, நன்றியுரை எல்லாமே ஜெயலலிதா துதிபாடுபவைதாம்.

பிரம்மாண்டமான பேரணி, வியக்கத்தக்க விளம்பரம், வித்தியாசமான கண்காட்சி, தனிநபர் துதி-வழிபாடு இவை வேறு எல்லா ஓட்டுக்கட்சி மாநாடுகளிலும் கண்டவைதாம்.

அதிகார முறைகேடுகள் மூலம் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி, கட்டாய வசூல் செய்து, அரசு இயந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தி அ.தி.மு.க.வின் மதுரை மாநாடு நடத்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இதுவும் புதிதல்ல. எல்லா ஆண்ட, ஆளும் கட்சிகளும் இப்படிச் செய்துள்ளன.

ஆனால் ஜெயலலிதாவும், அவரது கட்சியினரும் இவை எல்லாவற்றிலும் ஓர் உச்ச நிலையைத் தொட்டிருக்கின்றனர். ஒரு பாசிஸ்டுக்கே உரிய ஆபாசமும் வக்கிரமும் கலந்தே எதையும் செய்வது என்று அவர்கள் முடிவு செய்திருப்பதையும் இந்த மாநாடு காட்டியது. இந்த வகையில் ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் தகுதியான வாரிசு மட்டுமல்ல, அவரையும் விஞ்சிவிட்டார்.

மதுரை அ.தி.மு.க. மாநாடு நடத்தப்பட்ட நோக்கம் குறித்து பத்திரிகைகள் பலவும் தமது ஊகங்களை எழுதின.



உத்திரவுபோட்ட மூன்றே வாரத்தில் இலவச வேட்டி - சேலை, சீருடை, உணவு, பயணத்தோடு கூலியும் கொடுத்து சில லட்சம் பேரைத் திரட்டச் செய்தார். எதிர்த்தரப்பு என்று எதுவுமே கிடையாது, திரும்பிய பக்கம் எல்லாம் தனது மூஞ்சிதான் தெரிய வேண்டும் என்கிற மூளைச் சலவை விளம்பரங்கள் செய்வித்தார்.

ஜெயலலிதாவை அரசியாகவும், அவதாரமாகவும் தெய்வமாகவும் வைத்துப்பல வினோதங்களும் நடத்திக் காட்டினார்கள்.

மாநாட்டு நாட்களில் மதுரையில் ஜெயலலிதா தங்குவதற்கு என்றே அரசு சுற்றுப்பயண விடுதி பல லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது. அங்கிருந்து மாநாட்டு மேடை வரை அரை மைல் தூரத்துக்குத் தனிச் சுரங்கப்பாதையே அமைப்பதாக இருந்தது; கால அவகாசம் இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது; தனிச் சாலை மட்டும் போடப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு, ஜெயலலிதா அந்த சுற்றுப்பயண விடுதியில் தங்கவில்லை. அவர் மதுரையில் தங்குவதற்கு ராசியான இடமாகக் கருதும் அசோகா ஓட்டலில்தான் தங்கினார்.

இந்தச் சுற்றுப்பயண விடுதி தவிர மாநாட்டு மைதானத்துக்குள்ளாகவே ஜெயலலிதா ஓய்வு எடுப்பதற்கு என்று ஒரு புதிய ஓய்வு விடுதியே பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதற்கான திட்டம் மட்டும் 27 முறை மாற்றி அமைக்கப்பட்டது. மேடையில் இருந்து இந்த ஓய்வு விடுதிக்குப் போகும் பாதையே கடப்பைக் கற்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேடையே நவீன நுரைப்பஞ்சு இழைக் கூரையினால் வேயப்பட்டிருந்தது. பீங்கான் ''டைல்ஸ்'' கற்கள் பதிக்கப்பட்டிருந்தது. இத்தனையையும் மறைத்து பூமேடையாகவே

படிப்பகம்

www.padippakam.com

அது மாற்றப்பட்டிருந்தது. பேரணியைப் பார்வையிடுவதற்காக இதேபோன்றதொரு மேடை ஓய்வு அறையுடன் சேர்த்து அமைக்கப்பட்டிருந்தது. மாநாட்டு மேடையின் இரு புறமும் ஜெயலலிதாவுக்கும், மந்திரிகளுக்கும் நிகழ்ச்சிகளின் போதே ஒப்பனை செய்து கொள்வதற்காக தனித்தனி அறைகள் கட்டப்பட்டன.

ஜெயலலிதாவுக்காக ஏற்பாடு செய்த சுற்றுப்பயண விடுதி, ஓய்வு விடுதி, ஒப்பனை அறை ஆகியவற்றின் குளியலறைகள், கழிப்றைகள் உட்பட எல்லாமே குளுகுளு வசதியோடு அமைக்கப்பட்டன. ஜெயலலிதா மைதானத்துக்கு வந்து மேடைக்குச் செல்ல அமைக்கப்பட்ட சாலையில் அவரது கார் போவதற்குக்கூட லாரிலாரியாகப் பூக்கள் கொட்டப்பட்டு மலர்ப்பாதை அமைத்தனர்.

மாநாட்டின் முக்கியமான நிகழ்ச்சியாக தங்கத்தாலும், வெள்ளியாலும், வைரத்தாலும் கோடி ரூபாய்க்கும் மேலான பரிசுப் பொருட்கள் ஜெயலலிதாவின் காலடியில் கொட்டப்பட்டன. எல்லாம் ஒரு பேரரசிக்குக் குறுநில மன்னர்கள் அளிக்கும் பரிசுகள் பாணியிலானவை.

மடிப்பாக்கம் வேலாயுதம் என்பவர் இருபது லட்சம் ரூபாய் மதிப்புடைய வெள்ளி சிம்மாசனம் ஒன்றை ஜெயலலிதாவுக்குப் பரிசளித்தார். ஜெயாவிடமே 20 மாதிரி வடிவங்கள் காட்டப்பட்டு அவரே ராஜ சிம்மாசனம் போன்றுள்ளதைத் தெரிவு செய்து உருவாக்கப்பட்டது. "யாளி" முகம் கொண்ட அது, சாத்திர முறைப்படி செய்து, "சாந்திபூஜை" நடத்திப் பரிசளிக்கப்பட்டது.

இதுதவிர வைரக்கற்கள் பதிக்கப்பட்ட தங்கக் கிரீடமும், வெள்ளிச் செங்கோலும், வெள்ளி வீரவாளும் பரிசுகளாகத் தரப்பட்டன. வெள்ளித் தாமரையில் நிற்கும் தங்க மீனாட்சி சிலையும், தங்கத்தினால் செய்த இரட்டை இலை, தங்க மீன் என்று ஏராளமாகத் தரப்பட்டன.

பரிசுப் பொருட்களை அணிந்து, ஒரு கையில் செங்கோலும், ஒரு கையில் வீர வாளும், தங்க வைரக்கிரீடத்தோடு சிம்மாசனத்தில் அமர்ந்த ஜெயலலிதா மகா ராணி போல தரிசனம் தந்தது மாநாட்டின் மிகமிக முக்கியமான நிகழ்ச்சி.

மாநாட்டின் இன்னொரு முக்கியமான நிகழ்ச்சி மந்திரிகள் ஜெயலலிதாவின் துதி பாடி, காலில் விழுந்து கும்பிடு போடுவது தான். புரட்சித் தலைவி, காவியத் தலைவி என்று தொடங்கி, சத்தியத்தாய், தர்மத்தாய் என உயர்த்தி காவல் தெய்வம், குல தெய்வம், இதய தெய்வம், மீனாட்சி, காமாட்சி என்பதுவரை அவரவர் வாய்க்கு வந்தபடி உளறினர். வேரறுந்த மரமாய் சாய்வது, நெடுஞ்சாண் கிடையாய் விழுவது, முழங்கால் போட்டுக் குனிவது, என்று அவரவர் தரத்துக்கும் தகுதிக்கும் ஏற்ப ஜெயலலிதாவின் காலில் விழுந்தனர்.

இதைக் கண்டு முகம் சுளிக்கவோ, கூச்சப்படவோ செய்யாது, வக்கிரமாக ரசித்து மகிழ்வதே ஜெயலலிதாவின் பார்ப்பனப் பண்பாகிவிட்டது. ராட்சதக் "கட்-அவுட்"கள், சுவரெழுத்து - சுவரொட்டிகள், பலூன்கள் மட்டுமல்ல, பெரிய அளவுக்கு ஆயிரக்கணக்கான புகைப்படங்கள் விளக்குக் கம்பங்களில் தொங்க விடப்பட்டிருந்தன. ஒருவர் திரும்பிய பக்கம் எல்லாம் தனது மூஞ்சியே இருப்பதை மட்டுமே பார்த்துப் பரவசப் படுகிறார்; சதாகாலமும் தனது துதிபாடுவதையும், தனது காலில் விழுவதையுமே ரசிக்கிறார் என்றால் அது அவரது மனவிகாரத்தைக் குறிக்கிறது.





அரசியல் பண்புகளோடு இந்த மனவிகாரம் இணையும்போது தனக்கு மாற்றுக் கருத்துடைய எதிர்த்தரப்பு என்று எதுவுமே இருக்கக்கூடாது என்று அடக்கி ஒடுக்கி அழித்துவிட முயலும் பாசிசம் முழுமையடைகிறது.

ஒருபுறம் வறுமையிலும் வறட்சியிலும் பெரும்பான்மையினரான மக்கள் பரிதவிக்கும்போது, சமூக விரோதக் கிரிமினல் குற்றவாளிகள் - போலீசின் மிருகத்தனமாக தாக்குதலுக்குப் பலியாகும்போது, மறுபுறம் ஆளும் கும்பல் ஆடம்பரக் களிவெறியாட்டத்தில் குதூகலிக்கும் ஆபாச உணர்வை வெளிப்படுத்துகிறது.

இந்த அருவெறுக்கத்தக்க ஆபாச உணர்வு மேலீட்டால்தான் சாதாரண மக்கள் குடிதண்ணீரோ, பேருந்து நிறுத்தமோ கேட்டுப் போராடினால் கூட துப்பாகிச் சூடு நடத்துச்சொல்லுகிறது, ஜெயலலிதா கும்பல். இதனால் கடல்கடந்து வரும் புலிகளைவிட இங்குள்ள சாமானிய மக்களையும் கண்டு அஞ்சும் நிலைக்கு இந்த பார்ப்பன - பாசிச கும்பல் தள்ளப்பட்டிருக்கிறது.

ஆகவே, மதுரை அ.தி.மு.க. மாநாடு உண்மையில் ஒரு வெற்றி மாநாடு அல்ல. வீழ்ச்சியைக் குறிக்கும் மாநாடு என்பது தெளிவாகத் தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

*இத்தொடர் கட்டுரையின் ஐந்தாவது, இறுதிப் பகுதி இது. பாரதீய ஜனதாவின் இந்து ராஷ்டிரம், அதற்கெதிராக காங்கிரசு மற்றும் பிற கட்சிகள் வைக்கும் மதசார்பின்மைக் கோட்பாடு இவையிரண்டும் தோற்றத்திலும், சில நடைமுறைப் பிரச்சினைகளிலும் முரண்படுகின்றனவே ஒழிய சாராம்சத்தில் ஒன்றுபடுகின்றன என்ற கருத்து முதற் பகுதியில் விளக்கப்பட்டது. மத சார்பின்மை என்ற கோட்பாடு ஐரோப்பாவில் எங்ஙனம் உதயமானது என்றும், இந்திய பாணியிலான மதசார்பின்மை எங்ஙனம் இந்துமத வாதத்தையே தன் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதையும் இரண்டாம் பகுதியில் பார்த்தோம். பல்வேறு தேசிய இனங்களையும், பழங்குடிகளையும் கொண்ட இந்திய துணைக் கண்டத்தை ஓரின நாடாக சித்தரிப்பதையும் புராதன சனாதனப் பண்பாட்டையே இந்தியப் பண்பாடாகக் கொள்வதையும் மூன்றாவது பகுதியிலும், சமஸ்கிருத மயமாக்கப்பட்ட இந்தியையே தேசிய மொழியாக முன்நிறுத்தும் போக்கிலுள்ள இந்துமதவாதக் கண்ணோட்டத்தை நான்காவது பகுதியிலும் கண்டோம்.*

• • •



# இந்து இந்தி இந்தியா

சமஸ்தானங்களாகவும், சாம்ராச்சியங்களாகவும் பிரிந்துகிடந்த இந்திய துணைக் கண்டத்தில் இனம், தேசிய மொழி, மதசார்பின்மை ஆகிய கருத்துக்களே பிரிட்டிஷாரின் வருகை, பிரிட்டிஷ் இந்தியாவின் தோற்றம் மற்றும் பிரிட்டிஷ் கல்விமுறை இவற்றின் வாயிலாகவே தோன்றின. ''தேசம் (Nation) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான சொல் நம்மிடம் இல்லை '' என்று விபின் சந்திரபால் அன்று கூறியது இங்கே குறிப்பிடத்தக்கது.

மேற்கத்தியக் கல்வி கற்பதற்கு வாய்ப்பிருந்த பார்ப்பன, மேல்சாதி மேட்டுக்குடி வர்க்கத்தினர்தான் மேற்சொன்ன கோட்பாடுகளை இந்திய நிலைமைகளுக்கேற்ப வரையறுத்தனர். அநேகமாக இவர்கள் அனைவருமே சமஸ்கிருதமொழி, சநாதனம் ஆகியவை குறித்து மரியாதையுடன் கூடிய பெருமிதமான கண்ணோட்டத்தையே கொண்டிருந்தனர்.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட முற்படும்போது பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்ட இந்தியா எனும் நிலப்பரப்பில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஒரு பொது அடையாளத்தையும், பாரம்பரியத்தையும் அளிக்க வேண்டியிருந்தது. இது வரலாற்றின் எந்தவொரு வர்க்க, இன மோதலிலும் காணக்கிடக்கும் நியதி.

இவ்வகையில் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கெதிரான பார்ப்பன சநாதன பாரம்பரியமே 'நமது' பாரம்பரியமாகச் சித்தரிக்கப்பட்டது. இன்று மதவாதம், மதசார்பின்மை பற்றி பேச்சு எழும்போதெல்லாம் மூன்று போக்குகள் பிரித்துக் கூறப்படுகின்றன. ஒன்று ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபா பிரிவினரின் 'இந்து ராஷ்டிரம்'' எனும் மதவெறி; இரண்டாவது காந்தியின் ''ஈசுவர அல்லா தேரே நாம்'' எனும் சமய 'சமத்துவம்'; மூன்றாவது நேருவின் 'முற்போக்கான' மதசார்பின்மை.

இந்த வகை பிரித்தல் உண்மை அல்ல; இந்தியப் பாரம்பரியம் பற்றிய பிரச்சினை எழுந்தபோது கிறித்தவர்கள், முஸ்லீம்கள் அல்லாத மற்ற அனைவரும் - பவுத்தம், சமணம் உட்பட - இந்து பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களே என்றும், இந்து பாரம்பரியமே இந்தியப் பாரம்பரியம் என்றும் இந்து மகா சபா பிரிவினர் கூறினர். இன்று பிரபல தேசியத் தலைவராக அங்கீகரிக்கப்படும் பாலகங்காதர திலகரும் இதே கருத்தை வைத்திருந்த ஒரு பார்ப்பன மதவெறியர். மேலும் திலகர் உள்ளிட்டு ஆர்.எஸ்.எஸ்ஸின் மூதாதையர்கள் அனைவருமே மகாராஷ்டிரத்தின் சித்பவன் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காந்தி வருண தருமக் கோட்பாடுகளையும், கீதையையும் தனது வழிகாட்டியென்றும் ராமராச்சியமே தனது லட்சியமென்றும் பகிரங்கமாக அறிவித்தார். நேருவோ வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினார் - ''புராதன இந்திய நாகரீகம்'' என்று வேதங்களையும், உபநிடதங்களையும் 'நமது' பாரம்பரியமாகக் குறிப்பிட்டார்.

இந்த மூன்று போக்குகளுக்குமே அடிப்படை ஒன்றுதான். அதுதான் இந்து மதவாதத்தின் அடிப்படையிலான இந்திய தேசியம். ஒரு சில எளிய உதாரணங்களைக் கொண்டே இதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.


இந்திய வரலாற்றை புராதன காலம், முகலாயர் காலம், பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் என்று பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள் பிரித்ததை இவர்கள் அனைவருமே முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர். இஸ்லாம் மற்றும் கிறித்தவத்தின் வரவு பல நூற்றாண்டுகளுக்கு முந்தையது என்றாலும் அதை ஒரு அந்நிய ஆக்கிரமிப்பாகவே இவர்கள் சித்தரித்தனர். இதே அளவுகோலைக் கொண்டு முகலாயர்க்கு முந்தைய பல்வேறு படையெடுப்புகளை பார்க்கவோ அல்லது 19ஆம் நூற்றாண்டில் இந்தியா என்று அழைக்கப்பட்ட நிலப்பகுதி அன்று ஒரு நாடாக இருக்கவில்லை என்ற வரலாற்று உண்மையை அங்கீகரிக்கவோ இல்லை.

இதற்கு முக்கியக் காரணம் இஸ்லாமின் மீது பார்ப்பன ஆதிக்க சக்திகளுக்கிருந்த ஜென்மப் பகை. வரலாற்றில் பார்ப்பன மதத்திற்கெதிராக கலகக்கொடி உயர்த்திய சக்திகள் எதுவும் வருணதர்மத்தின் அடிப்படையில் பார்ப்பனர்களுக்கு இருந்த அதிஉயர் அதிகாரத்தையும் அரசவைச் செல்வாக்கையும் கேள்விக்குள்ளாக்கவில்லை. வெற்றி கொண்டவர்கள் என்ற முறையிலும், மதக் கோட்பாடு ரீதியாக இந்து மதத்தைவிட நவீன மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலும் அவர்கள் பார்ப்பனர்களின் அங்கீகாரத்தை நாடவில்லை; 'சத்திரியர்களை' அங்கீகரித்து, ஆசீர்வதித்து ஆட்சியிலமர்த்தும் அதிகாரத்தை பார்ப்பனர்கள் இழந்தனர்.

முகலாயர்களின் தோல்வியும் பிரிட்டிஷாரின் வெற்றியும், மீண்டும் புதிய வடிவில் சநாதன சாம்ராச்சியத்தைக் கட்டியமைக்கும் வெறியைத் தூண்டிவிட்டன. இல்லையெனில் மராத்திய மன்னனான சிவாஜியை ஆக்கிரமிப்பை எதிர்த்த 'பாரத' வீரனாகச் சித்தரிக்க என்ன காரணம்? ஒரே காரணம் சிவாஜி முகலாய மன்னன் ஔரங்கசீப்பை எதிர்த்தான் என்பது மட்டும்தான். அதேபோல சீக்கிய மதகுருவான குருகோவிந்த் சிங்கும், ராஜபுத்திர வமிசத்தைச் சார்ந்த ராணா பிர

படிப்பகம்

www.padippakam.com



தாப் சிங்கும் மாவீரர்களாகச் சித்தரிக்கப்பட்டதன் நோக்கமும் இதுதான்.

போர்த்துகீசியரை இறுதிவரை எதிர்த்துப் போராடிய குஞ்ஞாலி மரைக்காயரும், முதல் சுதந்திரப் போரைத் தலைமை தாங்கி நடத்திய பகதூர் ஷாவும், ஆங்கிலேயரை உயிருள்ளவரை எதிர்த்த ஹைதரும் திப்புவும் தேசப்பற்றின் நாயகர்களாகச் சித்தரிக்கப்படாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டதன் காரணமும் இதுதான். இவர்கள் மட்டுமல்ல, முதல் சுதந்திரப் போரில் சிப்பாய்களின் நிர்ப்பந்தம் மற்றும் மிரட்டல் காரணமாகத்தான் அவர்களுக்குத் தலைமை தாங்கியதாக ஒப்புதல் வாக்குமூலம் தந்த ஜான்சி ராணி லட்சுமி பாய், தேசபக்த வீராங்கனையாகச் சித்தரிக்கப்பட்டதும் பேகம் ஹசரத் மகல் இருட்டடிப்பு செய்யப்பட்டதும் இந்திய 'விடுதலை'ப் போராட்டத்தின் தலைமையிடம் நிலவிய முஸ்லீம் எதிர்ப்பு இந்து மதவாதக் கண்ணோட்டத்தின் காரணமாகத்தான்.

இந்து மதப் பெண் கடவுளின் வடிவில் 'பாரதத் தாயை' உருவாக்கியது, ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு போர்க்குணமிக்க சின்னமாக காளியை சித்தரித்தது, பசுவதை எதிர்ப்பு - ஆகிய அனைத்தும் இந்து தேசியத்தின் வெளிப்பாடுகளே.

பார்ப்பன இந்து மதத்தின் எல்லைகளுக்கு வெளியே தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கப்பட்டவர்களை 'ஹரிஜன்' என்று புதுப்பெயர் சூட்டி சநாதன நிறுவனத்திற்குள் வளைத்துப்போட காந்தி முயன்றதும், இதை ஆட்சேபித்த அம்பேத்கரை மூர்க்கமாக எதிர்த்ததும் சநாதன தேசீயத்திற்குச் சான்றுகள்.

இருப்பினும் பா.ஜனதாவின் இன்றைய முஸ்லீம் எதிர்ப்பு வெறியுடன் ஒப்பிடும் போது காந்தியின் 'சகிப்புத்தன்மை' போற்றத்தக்கதல்லவா என்ற வாதம் வைக்கப்படுகிறது. ஆனால், அன்றே முஸ்லீம் எதிர்ப்பு வெறியர்களாக இருந்த இந்து மகா சபாவினரைக் கலந்தாலோசிக்காமல் இந்து மதம் தொடர்பான எந்தப் பிரச்சினையிலும் காந்தி முடிவெடுக்கவில்லை என்ற உண்மை காந்தி ஆர்.எஸ்.எஸ்.பால் வைத்திருந்த அணுகுமுறைக்கு ஒரு உதாரணம். தீவிரவாதமாக இருந்தாலும் மிதவாதமாக இருந்தாலும் மதவாதம் மதவாதமே.

காந்தியின் நோக்கம் 'சுயராச்சியம்' மட்டுமல்ல; இந்துமதத்தை மறு ஒழுங்கு செய்வதும்தான். அதனால்தான் காந்தியும் சரி நேருவும் சரி மக்களை மத அடிப்படையில் பாகுபடுத்தி பின்னர் அவர்களிடையேயான சகிப்புத்தன்மையைப் பற்றிப் பேசினர். மாறாக வர்க்க அடிப்படையில், அல்லது தேசிய இன அடிப்படையில் மக்களைத் திரட்ட முயன்றவர்களை எதிர்த்தனர்.

'விடுதலைப்' போராட்டத்தின் சுக்கானைக் கையில் பிடித்திருந்த இந்திய தரகு முதலாளி வர்க்கம் நடைமுறை சாத்தியங்களின் சாதகபாதக அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஆர்.எஸ்.எஸ்-க்குப் பதில் காந்தியை முதன்மையாக ஆதரித்தது. ஏகாதிபத்தியத்துடன் கள்ளக்கூட்டு வைத்திருந்த தரகு முதலாளி வர்க்கமும் அதன் பிரதிநிதிகளும் மக்களை அணிதிரட்டுவதற்கு முற்போக்கான முழக்கங்கள், குறியீடுகள், கொள்கைகளுக்குப் பதில் உளுத்துப்போன புராதன, பார்ப்பன மதவாதத்தைத் தெரிவுசெய்ததில் வியப்பேதும் இல்லை.

விடுதலைப் போராட்டத்தின்போதும், 1947 க்குப் பின்னரும் பல்வேறு பிரச்சினைகளில் மேற்கூறிய சக்திகள் எடுத்த நிலைப்பாடும், அவர்களுக்குள் ஏற்பட்ட சமரசமும் ஏராளம். 1947 க்கு முன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குகெதிராக இந்து தேசியம் முன்வைக்கப்பட்டது. பிரிட்டிஷாரின் வெளியேற்றத்துக்குப் பின் இந்து தேசியம் சிறுபான்மை மதத்தினருக்கு எதிராகவும், தேசிய இனங்களின் உரிமைப் போருக்கு எதிராகவும், இந்திய துணைக் கண்டத்தின் அண்டை நாடுகளுக்கு எதிராகவும் திருப்பப்பட்டுள்ளது.

உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் வர்க்க முரண்பாடுகளை மதக் கலவரங்களாக்குவது என்ற துவக்க நிலையிலிருந்து இன்று 'இந்து ராஷ்டிரம்' என்ற அரசியல் முழக்கத்தின் அடிப்படையில் நேரடியாகக் களத்தில் இறங்கியிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். இந்தி - இந்து - இந்தியா என்ற கோட்பாட்டின் நெஞ்சைப் பிளந்து அதனுள்ளிருக்கும் பார்ப்பன மதவாத நஞ்சை அம்பலப்படுத்தாத எவரும் மதசார்பின்மை பற்றிப் பேசுவது வெற்று மோசடியாகத்தான் இருக்கும்.

இதை போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் யாரும் செய்யவில்லை, செய்யவும் மாட்டார்கள். ஏனெனில் இந்தச் சித்தாந்தத்தின் அடிப்படையுடன் அவர்கள் முரண்படவில்லை. வெறும் முஸ்லீம் எதிர்ப்பு மட்டுமல்ல; இந்தி ஆதிக்கம், வடமொழி வழிபாடு, தேசிய இன ஒடுக்குமுறை, தெற்காசிய வல்லரசுக் (அகண்ட பாரதம்) கொள்கை, இந்துமத மீட்புவாதம் இவை அனைத்தும் இணைந்த கலவைதான் பா.ஜனதாவின் இந்து ராஷ்டிரம். நரசிம்மராவ், வி.பி.சிங், ஜோதிபாசு ஆகியோர் இவை ஒவ்வொன்றையும் எதிர்க்கிறார்கள் என்று அரசியல் அறிவிலிகள் மட்டுமே நம்ப முடியும்.

— முற்றும்

படிப்பகம்

www.padippakam.com

# சத்யஜித் ரே: சில கேள்விகள்



"பூப்பூத்த நாணல் - காற்று அதன் தலைசீவிச் சாய்ந்திருக்க - அக்காளும் தம்பியுமாகப் பாய்ந்து ஓடுகிறார்கள் - கறுத்த மரவட்டை ரயில் சீறிக்கொண்டு போகிறது - ஒவ்வொரு பெட்டியாகக் கடக்கிறது - இருவரும் மகிழ்ச்சி நுரை பொங்கச் சிரித்து ரசிக்கிறார்கள் - பூப்பூத்த நாணல் குஷியோடு தலையாட்டுகிறது"

— இது **சத்யஜித்** ரேயின் முதல் படத்தில் ஒரு காட்சி

'நாணலும், ஊர்ந்து செல்லும் ரயிலும் கொண்ட ஒரே ஒரு ஃபிரேம் - இதுவே ரே எடுத்த முதல் காட்சி. அழகின் முத்திரை. அதுமட்டுமே ஒருவருக்குப் பார்க்கக் கிடைத்து, படத்தின் மற்ற பகுதிகளோ, அவரது வேறெந்தப் படங்களோ பார்க்காமல் இருந்தாலும், நிச்சயமாக, இந்த ஒரே ஃபிரேமைப் படைத்தவர் எதிர் காலத்தில் மிகப்பெரிய டைரக்டராக வருவார் என்று சொல்லிவிடலாம்' - இது அதே காட்சி பற்றி எனது ஓவிய நண்பர் கண்களில் ஒருவித ஆனந்தமும் பரபரப்பும் துள்ள சொன்ன பாராட்டு.

ரே அந்த அழகே அழகான முதல் ஷாட்டோடு நிறுத்தியிருந்தால் பிரச்சனை இல்லை; பதேர் பாஞ்சாலி (சாலையின் சங்கீதம்)யை முடித்து, அதற்குமேலும் 30 படங்கள் எடுத்ததால்தான் ரேயின் பங்களிப்பு என்ன என்ற ஆய்வில் இறங்குகிறோம்.

ரேயின் இறப்புக்குப் பிறகு அவரைத் தெய்வமாக்கி 'தூபதீப நைவேதனம்' காட்ட ஒரு கும்பல் புறப்பட்டிருப்பது பற்றியோ, முன்பே அவருக்கு சினிமாவில் தாகூர் என்ற பட்டங்கட்டத் துடித்தவர்கள் இன்று ஒருவர்க்கொருவர் முந்துவது பற்றியோ நான் ஆச்சரியப்படவில்லை - இந்தியப் புதிய சினிமாவுக்கு ரே ஒரு முன்னோடி. முற்போக்காளர் என்று ரேயிலிருந்து நூல் பிடித்து ஒரு பாதைபோட நினைப்பவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்காகவும் நான் ஓர் ஆய்வில் இறங்க விரும்புகிறேன்: விரிவான ஆய்வை நடத்துகின்ற நோக்கம் இல்லை என்றாலும், ஒருசில முக்கியமான கேள்விகளை அவர்கள் முன்னே வைக்க விரும்புகிறேன்.

ரே குப்பை மசாலாப் படக்காரர் அல்ல. தன் மனத்துக்கு நெருங்கிய சிறுசிறு அசைவுகளை, மனித உணர்வுக் கொந்தளிப்புகளை, நிகழ்வுகளை *அழகாகப்*படம் பிடித்தார்; நுணுக்கமாக இயற்கையைப் பார்த்தார்; இயற்கைமூலம் பேசினார்; 'பதேர் பாஞ்சாலி'யில் இடிமுழக்கம், அசைந்தாடும் நாணல், மழையில் ரவிசங்கரின் இசையோடு துள்ளியாடும் துர்க்கா; 'காஞ்சன் ஜங்கா'வில் பனிமூட்டம்; 'அஷானி சங்கேத்'தில் பட்டாம் பூச்சி - இவ்வாறு இயற்கை ரே மூலம் பேசியது.

படம் தொகுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்காத விதத்தில் காட்சிகளை ரே மாற்றுகிறார்; பின்னணி இசையைக் கதையின் போக்கோடு தைத்துவிடுகிறார்.

— இதெல்லாம் ரே படத்தில் உண்டு. ரேயின் கணங்களைக் கண்டு அதிசயித்து தரிசித்துவிட்டால் போதுமா? 'நீரற்ற ஆற்று மணலில் தெரிகிறது / தனிமையாதப் பயணம் செய்த / உன் / வண்டித்தடம்' என்று எழுதிய கவிஞர் 'இந்திரனை'ப் போல 'நீளும் நிழல்களில் நீயும் ஒன்றாகிப் போனதற்கு' ஏங்கிக் கொண்டே இருந்தால் போதுமா? போதாது.

'சித்திரச் சோலைகளே உம்மைத் திருத்த இப்பாரினிலே
எத்தனை ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே'
'நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே'

— இப்படிப் பல கவிஞர்களின் ஓரிரு வரிகளில் நெஞ்சைப் பறிகொடுக்கிறோம். கவிஞர்களின் சிலவரிகளை மட்டுமே பிடித்துக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்துவிடமுடியுமா? உடனே, 'வேய், நீர் ஒரு மகாகவி வேய்!' என்று அவர்களுக்குக் கும்மியடித்துக் குளிப்பாட்டி.விடலாமா? கூடாது.

கலைஞர்களின் முழுப்பங்களிப்பையும் ஆய்ந்துதான் ஒரு கணிப்புக்கு வரவேண்டும்.

★ ★ ★

ரேயை எப்படியெல்லாம், எதற்கெல்லாம் பாராட்டுகிறார்களோ அதிலிருந்தே தொடங்குகிறேன்.

**"ரேயின் படங்களில் உள்ள அற்புதமான.விஷயம் அவரது சிக்கனம். ஃபிரேம்களில், காட்சிகளில் எதுவுமே வீண் போவதில்லை."**

'அப்புவின் உலகம்' என்ற படம்: அபர்ணா பணக்காரி; எஸ்டேட் குடும்பம்; திருமணத்தன்று அவளுக்கு வாய்த்த கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது; அந்த 'சாபத்திலிருந்து மீட்டு' அப்பு அவளைத் திருமணம் செய்து கொண்டு கல்கத்தாவில் உள்ள ஏழைக் குடியிருப்புக்கு அழைத்துவருகிறான்.

காட்சி மொத்தம் சுமார் 3 1/2 நிமிடங்களே திரையில் வருகிறது. ஆனால் அதற்குள் *ஒரு கருத்து* சொல்லப்பட்டுவிடுகிறது.

காடசியைக் கீழே தருகிறேன்—

மாடிக்கு அழைத்துச் சென்று அபர்ணாவை அறையில் விட்டு விட்டு வெளியே போகிறான் அப்பு. அறை மையத்திலிருந்து ஜன்னலருகே சென்று வெளியே பார்க்கிறாள் அபர்ணா. பார்த்துக் கொண்டே முகத்தைப் பொத்தி அழுகிறாள். பின்னணியில் குழந்தையின் சிரிப்பொலி தொடங்குகிறது. அழுகையின் ஊடாகச் செல்கிறது. பின்னணியில் ஆழ்ந்த சிந்தனையோடு சோகம் கலந்த இசை தொடருகிறது. அபர்ணா, கிழிந்த ஜன்னல் திரை வழியே வெளியே பார்க்கிறாள். (அவளது அழுகை நிற்கிறது; குழந்தையின் சிரிப்பும், பின்னணி இசையும் தொடர்கிறது) தோட்டத்திற்குள் ஒரு பெண் நுழைகிறாள். அவள் குழ்ந்தை பின்தொடர்கிறது. தாய் குழந்தையை குனிந்து எடுத்து கயிற்றுக் கட்டிலில் உட்கார வைக்கிறாள். (அபர்ணாவின் முகத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பு மாறுகிறது. குழ்ந்தையின் சிரிப்பு தொடர்கிறது.) அபர்ணா பெருமூச்சு விடுகிறாள்; ஜன்னலிலிருந்து பார்வையை நீக்கி

படிப்பகம்

www.padippakam.com

அறைக்குள் பார்க்கிறாள்; கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். வெளியே குழந்தையின் சிரிப்பொலி நிற்கிறது; மீண்டும் பின்னணி இசை மட்டும் தொடர்கிறது; வெளியே குரல்கள், எதிரொலிகள், கேட்கின்றன. அறைக்குள்ளே அப்பு வருகிறான்; ஜன்னலருகே நிற்கும் அபர்ணாவிடம் சென்று நிற்கிறான்; அவர்களின் பின்னே ஜன்னலிலிருந்து பிரகாசமான ஒளிவெள்ளம் உள்ளே பாய்கிறது. அவள் அவனை அர்த்தத்துடன் பார்க்கிறாள். இருவரும் சேர்ந்து கீழே உள்ள பெண்கள், குழந்தைகளைச் சந்திக்க செல்கிறார்கள்.

கல்கத்தாவில் அப்புவோடு ஒரு வெற்று (வெறிச்சிட்ட அறை) வாழ்க்கை வாழப் போகிறோமா என்ற மன உளச்சலில் அழுகிறாள்; வெளியே குழந்தை ஒன்றின் குரலைக் கேட்டதும், எதிர்காலத்தில் தனக்கு 'தாய்' என்ற கடமை காத்திருப்பதை உணர்ந்து-புரிந்து கொள்கிறாள்; அழுகையை நிறுத்துகிறாள். சினிமாவைப் பார்ப்பவர்களுக்கு இதை உணர்த்திய பிறகே (எவ்வளவு பேருக்கு இந்தச் சிறு நுணுக்கம் புரிந்திருக்கும் என்பது விவாதத்துக்குரிய விஷயம்தான்) அபர்ணா கீழே அழைத்துச் செல்லப்படுகிறாள்.

மேலே உள்ள காட்சியில் சிக்கனமும், பாத்திரங்களின் உள்ளே உணர்வுகளை மன இயக்கத்தை சுருங்கப் புரியவைக்கும் வடிவமும் அற்புதமானவை; ஆனால் இந்த அதிஅற்புதமான வடிவத்தின்மூலம் ரே என்ன கருத்தைப் புரிய வைத்திருக்கின்றார்? எதிர்காலத்தில் அபர்ணாவுக்கு என்னென்ன பிரச்சனைகள் வரப்போகிறதோ அவற்றை சூசகமாகக் காட்டினாரா? இல்லை. சமூகத்தில் நெடுங்காலமாகப் பழக்கப்பட்டுள்ள ஆண் ஆதிக்க கருத்தை - 'குழந்தை ஈன்று கொடுப்பதே பெண்ணுக்கு முதல் கடமை' என்ற கருத்தைத்தான் அற்புதமாகச் சொல்லியிருக்கிறார். சிக்கனம், காட்சிப்படிமம், செல்லுலாய்டு (பிலிம்) கவிதை - ரே தன் கருத்தைச் சுவையாகச் சொல்வதற்காக அமைத்த வடிவம்.

ஒரு காட்சியிலேயே ரேயின் முழு தத்துவ தரிசனத்தையும் சாரமாகப் பார்த்துவிட முடியுமென்று சொல்லவில்லை; 'அப்புவின் உலகம்' கதையின் முழுப் போக்கையும் வைத்து அதில் இந்தக் காட்சியைப் பொருத்திப் பார்க்கும் போதுதான் ரே இப்படிப்பட்ட கருத்தோட்டம் உள்ளவர் என்று முடிவுக்கு வரமுடிகிறது.

''கலைஞனின் சொந்த மனஓட்டம், உள் உலகம், மனோதத்துவப் பார்வை, இதயக்குரல் இல்லாமல் ஒரு கலை இருக்க முடியாது. அதுதான் ரேயின் கலை.''

ரேயின் சொற்களில் சொல்லுவதானால், சினிமாவின் *முக்கிய* அம்சமே மனதிற்கு மிக நெருங்கிய விஷயங்களை வெளிப்படுத்துவதும் பிரதிபலிப்பதும்தான். மன அடுக்கிலுள்ள ரகசியங்களை சில அசைவுகள், மெல்லிய சைகைகள், குரலில் உண்டாகும் சில மாற்றம், ஏற்ற இறக்கம், சுற்று வட்டாரத்தில் உள்ள பொருள்கள் மூலமாக, ஒளி வித்தியாசங்கள் மூலம் பலவகையில் வெளிப்படுத்த முடியும். இதை காட்சிகளின் இயக்கம் என்பதைவிட, காட்சிகளின் வளர்ச்சி என்று சொல்வதையே ரே பெரிதும் விரும்புகிறார்.

ரேயின் வாதப்படி ஒவ்வொருவருக்கும் மனதுக்கு நெருக்கமான விஷயம் இருக்கும். அவர்களது ரசிகர்கள் கருத்துப்படி அதை ஆய்வுக்கு உட்படுத்த இயலாது. அப்படி என்றால், ரோம் பற்றி எரிந்த போது நீரோ பிடில் வாசித்ததை தவறு என்றா சொல்ல முடியும்? அவன் மனதுக்குப் பிடித்தமானதைத்தானே நீரோ இசைத்திருக்கிறான். வேண்டுமானால் அப்போது நீரோ இசைத்த ராகம், அதன் லட்சணம் பற்றி அலசி ஆராயலாம். அந்தக் கலைஞனின் இசைக்கு வழங்கும் கௌரவமாக அது இருக்கும்.

குரல் மாற்றம், சைகை, சிறு அசைவுகள் ஒருவிதத்தில் படைப்பில் இடம்பெறும்; ஆனால் அதுவே முக்கியமான அம்சமல்ல; ரே அடித்துச் சொல்வது எதனால்? 'கலை, படைப்பு ஒருவரின் தனிப்பட்ட, சுயமான வெளிப்பாடு என்ற எண்ணத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் நான்' என்கிறார் ரே. எவ்வளவோ சமூக கொந்தளிப்புகள், நெருக்கடிகளைத் தாண்டி தன் அகவிளக்கை அணையாமல் காப்பாற்றினார் என்று ரே ரசிகர்கள் சொல்லுவார்கள்.

ரே அவர்களின் கருத்து - ஒரு கலைஞன் நடப்பில் உள்ள சமூகப் பிரச்சனைகள் பற்றி ஒரு சினிமா எடுத்தால் அவன் தனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் மாட்டிக்கொள்கிறான். ஆனால் '70களில் வேலையில்லாத் திண்டாட்டம், கல்கத்தா நகரில் நடுத்தர வர்க்க குடும்பத்தின் மாற்றங்கள், 1989-ல் 'கணஷத்ரு' போன்ற படங்களை ஏன் அவர் எடுத்தார்? இவர்களால் விளக்கம் சொல்ல முடிவதில்லை. ரேயிடம் உள்ள கலைக் கோட்பாடுகள் அவற்றை விளக்க வலுவற்றவை. அத்தகைய படங்களிலும் தனிநபர்களின் மனஓட்டமாக மட்டுமே கதை சொல்லியிருந்தாலும், ஏன் அதில் தலைகொடுத்தார்?

அறுபதுகளின் இறுதியில், எழுபதுகளின் தொடக்கத்தில் கல்கத்தாவில் பரவிய புரட்சி அலை அறிவுஜீவிகளை உலுக்கி எடுத்தது. உலகுக்கே மனிதாபிமானத்தை ஓதிய ஞான தேசிக வர்க்கம் நடுத்தர 'பத்ரலோக்' வர்க்கத்தின்முன் கேள்விகள் எழுந்தன. ஓரளவு வெளிப்படையான அரசியல் பொறுப்புணர்வோடு சமூக அரசியல் விமரிசனத்தோடு இலக்கியம், நாடகம், சினிமா (மிருணாள் சென் போன்றவர்கள்) வெளிவந்தது. அரசின் பாசிச பயங்கரவாதம் ஆகியவற்றால் ரே குறைந்த பட்சம் தன்னையே குற்ற உணர்வுக்கு ஆட்படுத்திக் கொள்ள நேரிட்டிருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் கணிசமான மார்க்கெட் பிடித்திருந்த 'ரே'வுக்கு தனது 'மனிதாபிமான'த்தை (தாராள மனதுடன்) ஒருசிறிது வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது.

இதெல்லாம் ரே பற்றிய கொச்சையான அவதூறு என்று அவரது சீடர்களும், ரசிகர்கூட்டமும் புலம்பித் தவிக்கக்கூடும். விரிவான விவாதத்தைப் பின்னால் வைக்கிறேன். ஒரே ஒரு எடுத்துக்காட்டு இதோ:


பதேர் பாஞ்சாலி

1989-ல் 'கணஷத்ரு' (மக்களின் எதிரி) படம் எடுத்தார். இது இப்சனின் நாடகத்தை வங்காளச் சூழலுக்கேற்ப, மாற்றப்பட்டது. ஆனால் மூலக்கதையில் இல்லாத முடிவைத் திணித்தார் ரே. கோயிலின் உள்சுற்றில் கர்ப்பக்கிருகக் கால்வாய் நீர் வெளியேறும்; அழுக்கு நீரைப் 'புனித நீர்' என்று மக்கள் பருகிவிட ஊரில் மிகமோசமான தொற்றுநோய் பரவிவிடுகிறது. உள்ளூர் டாக்டர் குப்தா கோயிலை மூடச் சொல்லுகிறார். குப்தாவின் தம்பி கோயில் நிர்வாகத்தோடு சேர்ந்துகொண்டு எதிர்க்கிறான். கடைசியில் டாக்டருக்கு ஆதரவாக இளைஞர்கள் திரண்டு ஊர்வலம் விடுகிறார்கள். இப்சனின் நாடகத்தில் 'உன் அழைப்பு கேட்டு யாரும் வரவில்லை என்றாலும் தனி ஆளாய் துணிச்சலோடு முன்னேறு!' என்று முடியும்; டாக்டர் எந்த முயற்சியும் எடுக்காமலேயே இளைஞர்கள் திரண்டு விடுகிறார்கள் என்று அதை ரே மாற்றுகிறார்.

25 ஆண்டுகளாக ரேயின் குரலைக் கேட்டுப் பழகியவர்கள் 'கணஷத்ரு'வை அவரது இதயக்குரலாகப் பார்க்கவில்லை.

''பெண் பற்றிய பிரச்சினையில் ரே அக்கறை இல்லாதவர் என்ற விமரிசனம் அபாண்டமானது; அரக்கத்தனமானது. ரே என்றும் நினைவில் நிற்கக்கூடிய வலுவான பெண் பாத்திரங்களைப் படைத்திருக்கிறார்.''

- மறக்க முடியாத சுன்னி பாலாதேவி ('பதேர் பாஞ்சாலி'யில் வரும் கிழவி)
- குழந்தைபெறாத 'மலடு' சாருலதா கணவனின் அத்தை மகன்

படிப்பகம்

www.padippakam.com



அப்புசன்ஸார்

அமலோடு நிறைவேறாத காதலை வளர்க்கிறாள்; கடைசியில் தனக்கு விருப்பமான எழுத்துத் துறையில் இறங்குகிறாள்; அமல் வெளியேறிவிடுகிறான். ('சாருலதா')

- அப்பாவி தயாமாயீ, ஜமீந்தார் மாமனாரால் தான் காளியின் அவதாரம் என்று நம்ப வைக்கப்படுகிறாள்; கடைசியில் பைத்தியம் பிடித்து தற்கொலை செய்து கொள்கிறாள். ('தேவி')
- மனவேதனைமிக்க கடந்த காலத்திலிருந்து மீளவிரும்பும் சுயேச்சையான பெண் அபர்ணா; மகப்பேற்றில் இறந்துவிடுகிறாள். ('அபு சன்ஸார்')
- உடல் பசிக்கும் அன்புக்கும் ஏங்கும் விதவை ஜெயா ('அரண்யேர் தின் ராத்ரி')

பெண் கதாபாத்திரங்கள் சூழலில் சிக்கித் தவிக்கிறார்கள்; எந்த வித மீட்புக்கான, விடுதலைக்கான வழியும் அவர்களுக்குக் கொடுக்காமல் உள்ளதை உள்ளபடியே ரே சித்தரிக்கிறார்.

சினிமா பார்வையாளன், இப்பெண் கதாபாத்திரங்களைப் பார்ப்பவன், எல்லோருமே விதிவழியே பயணம் போவதாகவே புரிந்து கொள்வான். ரேயின் இரண்டு படங்களில் வரும் பாத்திரங்களைப் பற்றி விரிவாக அலசிக்காட்டுகிறேன்.

'மஹா நகரி'ல் (1963) வரும் பெண்பாத்திரம் ஆரத்தி. வீட்டுப் பொருளாதார நிலைமை காரணமாக வேலைக்குப் போகிறாள்; கணவனைவிட வேகமாக முன்னேறுகிறாள்; படத்தின் கடைசியில், உடன் வேலை செய்யும் ஆங்கிலோ - இந்தியப் பெண்ணை அநியாயமாக வேலை நீக்கிவிடுவார்கள்; அதை எதிர்த்து ஆரத்தி வேலையை விட்டு விடுகிறாள்.

ஒரு பக்கம் சரியான காரணமாக இருந்தாலும், கணவன் மேல்நிலையை எட்டுவதற்காகவே பெண் தன் முன்னேற்றத்தைப் பலிகொடுக்கிறாள் என்ற கருத்தும் கலந்தே இருக்கிறது. ஏனென்றால், அநியாயத்தை எதிர்த்துப் போராடும் ஆரத்தி வேறு ஓர் இடத்தில் வேலை தேடிக் கொள்வதாக ஏன் முடிவை வைத்திருக்கக் கூடாது? பெண் ஆணுக்குக் கீழே என்ற கருத்தை எதிர்க்கின்ற மிகமிக வலுவான பாத்திரத்தை உருவாக்க வேண்டுமானால் மாதிரி ஒன்றை உருவாக்க வேண்டும்; இது ரேக்குப் பிடிக்காத கலைக்கோட்பாடு. தவிர, இப்படி ஒரு மாற்று உருவாக வேண்டிய சூழ்நிலையை படத்தில் கொண்டுவர நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்; எனவே ஆண் ஆதிக்கக் கருத்தை இதமாக நீவிவிடுவதானாலும், படத்தில் உள்ள முடிவே ரேயின் முடிவு.

'சாருலதா'வில் (1964) வரும் பாத்திரம் சாருலதா. அற்புதம் என்று பலர் மெச்சுவதுண்டு. தாகூரின் 'உடைந்த கூடு' என்ற 1901 ஆம் ஆண்டு குறுநாவலின் திரை ஆக்கம். பூபதி பத்திரிகை முதலாளி. சாருவின் 13-வது வயதில் குழந்தை மணம் செய்து கொண்டான். வீட்டுக்கு அடிக்கடி வரும் பூபதியின் மருமகன் அமலோடு நெருங்கிப் பழகுகிறாள். பூபதி இயல்பாக பணக்கார வங்காளிகள் வீட்டில் உள்ள வழமுறைப்படி இதை அனுமதிக்கிறான். வேலையில் எந்நேரமும் பூபதி அலைவதால், அன்புக்கு ஏங்கிய சாரு அமலிடம் ஆவலோடு பழகுகிறாள். அதுவே அவளது ஒருதலைக் காதலாக வளருகிறது. அமல் புரிந்துகொண்டு அங்கிருந்து போய்விடுகிறான். அவன் திரும்ப வரமாட்டான் என்பது சாருவுக்கும் புரிகிறது.

பூபதி மாற்றத்தை விளங்கிக் கொள்கிறான். கடைசியில் தொழிலில் பிரச்சினையைச் சந்தித்து தளர்வோடு வரும் கணவனை சாருலதா வரவேற்பதோடு படம் முடிகிறது. அதாவது கணவனை / ஆணைப் பராமரிப்பதுதான் பெண்ணின் ஒரே கடமை என்று நிலவும் நிறுவனக் கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது.

படம் முழுக்க துணிச்சலாக அவளே முடிவுகள் எடுப்பதாகவும் எனவே முற்போக்கானவள் என்றும் வங்காளி அறிவுஜீவிகள் பலர் கருதுகிறார்கள். பணக்காரக் குடும்பங்களில் 19ஆம் நூற்றாண்டில் பெண்கள் இலக்கியம் எழுதப்பழகியதை இதற்கொரு அடிப்படையாக எடுத்துக்கொண்டார்கள்.

ரேயின் பாத்திரப் படைப்பான சாரு, தாகூரின் இலக்கியப் படைப்பான சாருவிலிருந்து மாறுபட்டவள். "கணவன் - மனைவிக்கு இடையே உள்ள வரம்புகளை எதிர்கொள்வது இருவருக்கு மட்டுமே உள்ள பொறுப்பு; அமல் போன்ற மூன்றாம் நபரின் குறுக்கீடு ஏற்க முடியாதது" என்பதே தாகூரின் கருத்து. நிறைவேற இயலாத மறுகும் காதல் தாகூரின் சிந்தனையிலேயே உள்ளதுதான். ஆனால் அது முதலாளித்துவக் குடும்பங்களில் பாலுறவாகவே அனுமதிக்கப்படுவதை தாகூர் அறிவார். ரே, தாகூர் படைத்த உறவை இன்னமும் முதலாளித்துவ பாலியல் அராஜகத்துக்கு நெருக்கமாக மாற்றுகிறார். சாரு அமல் உறவை பாலியல் உறவாக ஆழமாக்குகிறார் ரே.

அவருக்கே உரிய நுணுக்கங்களையெல்லாம் இதற்கும் பயன்படுத்துகிறார் ரே. எடுத்துக்காட்டாக, பான் (வெற்றிலை-பாக்கு) தயாரிப்பது அந்நாட்களில் பெண்களின் வேலை. ஒரு முறை சாரு கதை எழுதுவதை பக்கத்திலிருந்து அமல் மௌனமாகப் படிக்கிறான். இதைக்கண்டு தவிர்க்க விரும்பும் சாரு எழுந்து பான் தயாரித்து வரப்போகிறாள்; அதே பரபரப்பில் சுண்ணாம்பு, மசாலா இல்லாமல் பான் கொண்டுவந்து கொடுப்பாள்; இதே பான் தயாரிப்பை வீட்டுப் பெண்கள் எந்திரகதியில் செய்வதை பல இடங்களில் கொண்டுவருகிறார் தாகூர். ஆனால் திரைக்கதையில் இதை மாற்றி சாரு அமலுக்கு மிக விருப்பத்தோடு, காதலோடு பான் தயாரித்துக் கொடுப்பதாக மாற்றுகிறார் ரே. தாகூர், ரே இருவரது சாரு பாத்திர வார்ப்புகளுமே முற்போக்கான சமூக பாத்திரம் ஆற்றும் வாய்ப்பே இல்லாதவர்கள்.

அனேகமாக எல்லா பெண் பாத்திரங்களுமே பழைய, இன்றைய இந்தியாவின் ஆணாதிக்க சமூகத்தை எதிர்த்து நிற்க வலுவற்றவர்களாக, சபிக்கப்பட்டவர்களாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். தாகூரின் கதைகளை நிறையவே ரே கையாண்டிருக்கிறார். இருவருமே ஒரேமாதிரியான கண்ணோட்டத்திலிருந்து படைத்தார்கள் என்றுகூட சொல்லலாம். அந்த விதத்தில் சில விமரிசர்கள் சொல்லுவதுபோல வங்காள மறுமலர்ச்சியின் அன்றைய கலாச்சார பிரதிநிதி தாகூர்; கடைசி பிரதிநிதி ரே.

'பதேர் பாஞ்சாலி'யில் தாய் சரபோஜயாவுக்கு மகள் துர்காவைவிட மகன் அப்புவைப் பிடிக்கும்; தாய் - மகள் முரண்பாடு, துர்காவை சாகடிப்பதில் மறைகிறது; தன்னைப் போலவே பெண்ணான துர்கா துயரப்படப் போவதை விரும்பவில்லை பழைய நிலப்பிரபுக் கருத்து அசிங்கமாக நிறுவப்படுவதாக கதை அமைக்கப்பட்டுள்ளது.

தேவி'யில் வரும் தயாமாயீ மூடநம்பிக்கைக்கு அடிமைப்படுத்தும் மாமனாரை எதிர்க்கவில்லை; தந்தையை எதிர்க்கும் சீர்திருத்தவாதி மகன் அவள் குடும்பத்துக் குத்துவிளக்காய் மாறுவதையே விரும்புகிறான். தயாமாயீ அவனையும் எதிர்க்கவில்லை. கடைசியில், அவள் தற்கொலையில் 'விடுதலை'(?) அடைகிறாள்.

ரேயின் பெண் பாத்திரங்கள் பலியாடுகள்; வலுவானவர்கள் அல்ல.

*— அடுத்த இதழில் முடியும்.*



படிப்பகம்

www.padippakam.com

# புதிய கைத்தடி



நான் பழுத்தவள் தான்
புலரும் முன் கூட
நான் இறந்து போகலாம்
இருந்தாலும் உனக்காக...

நீ,
பட்டியில் பிறந்து -
பட்டினியில் வாழ்பவன்
பண்ணை வீட்டு ஆடுகளும் மாடுகளும்
அம்மா என்று உனக்கு
வகுப்பெடுக்கும் ஆசிரியைகள்!

நீ,
நிமிர்ந்தால் வானம் - அது
தொட முடியாத தூரத்தில்...!

குனிந்தால் பூமி - அது
அவர்கள் அதிகாரத்தில்!

பேரனே!
என் நரைத்த முடி கூட
அவர்களுக்கு உச்சியில்
உழைத்து வெளுத்ததுதான்!

என் உழைப்பைப் பிழிந்தவர்கள்
உடல் சுருக்கத்தை மட்டும்
விட்டு விட்டனர் - உனக்கு
சாட்சியங்களாக!

நீ, மூன்றாவது தலைமுறை!
போதும்...!
நான் பழுத்தவள் -
பகல் பிறக்கும் முன்கூட
நான் இறந்து போகலாம்!
இருந்தாலும்,
உனக்காக
என் கைத்தடியை மட்டும்
விட்டுச் செல்கிறேன்!

*செ.இரவிச்சந்திரன்*

# போர் முரசம்

*நிலோ:பர் மணாளன்*

நாங்கள் -
புல்லின் வேர்கள்
கல்லையும்
சப்தமின்றிப் பிளக்கும்
புல்லின் வேர்கள்.

நாங்கள் -
சிறிய உளிகள்
சிலை வடிப்பதோடு இல்லாமல்
சின்ன புத்தி கோமான்களின்
சிரமும் சிதைக்கும்
சிறிய உளிகள்.

நாங்கள் -
புள்ளின் கீதங்கள்.
ஒரு புதிய
பொதவுடமை விடியலுக்கு
கட்டியம் கூறும்
புள்ளின் கீதங்கள்.

நாங்கள் -
கூரிய முட்கள்
நசுக்கும் பாதத்தின்
உள்ளே புகுந்து
உச்சிவரை தாக்கும்
கூரிய முட்கள்.

நாங்கள் -
எறும்பு அணிகள்
வறுமை நோய் பரப்பும்
வக்கிர ஈக்களை
மயானத்திற்கு கடத்திச் செல்லும்
எறும்பு அணிகள்.

நாங்கள்
காற்றின் சங்கமம்
அடிமனம்
கொந்தளிக்கும் போது
புயலின் புறப்பாடு.

நாங்கள் -
தென்றல் இளைப்பாறும்
குன்றின் முடிகள்
குமுறி எழுந்தால்
உலகை உறையச் செய்யும்
எரிமலை வாயில்கள்.

நாங்கள் -
நெருப்பின் குழந்தைகள்
குடிசைகளுக்கு தீபங்கள்
அவசியமெனில்
மாளிகைகளுக்கு கொள்ளிகள்.

நாங்கள் -
போர் முரசங்கள்
சப்தங்களால்
சாமரங்களுக்கு
சாவுமணி அடிக்கும்
போர் முரசங்கள்.

நாங்கள் -
வியர்வைக் கடல்கள்
எங்கள்
உழைப்பின் பயனை
இன்று அனுபவிப்போர்
நாளை
மூழ்கிச் சாகும்
வியர்வைக் கடல்கள்!


**புதிய வெளியீடு!**

*புலிகள்
இயக்கத்தின்மீது
தடை ஏன்?*

*கேள்வி பதில்
வடிவத்தில் ம.க.இ.க-வின்
வெளியீடு*

*விலை ரூ. 1.50
அஞ்சல் செலவு: 0.50*

*கிடைக்குமிடம்:
சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.*


படிப்பகம்

www.padippakam.com

# கருஞ்சட்டையில் ஒரு பச்சோந்தி

பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பல் எந்த அளவு கொடிய தமிழின எதிரியாக உள்ளதோ, அந்த அளவு பச்சை துரோகிகளாக உள்ளது, திராவிடர் கழக வீரமணி கும்பல். துரோகிகளையும் சமரசவாதிகளையும் அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தாமல் எதிரியை ஒருபோதும் முறியடிக்க முடியாது. ஏனென்றால் எதிரிகளுக்குத் தேவையான சமூக ஆதரவு தேடித்தருபவர்களே துரோகிகளும் சமரசவாதிகளும்தான்.

யாரும் எதிர்பாராத வகையில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் காலடியில் வீரமணி சரணடைந்து, தான் ஒரு இனதுரோகி என்று அம்பலப்படுத்திக்கொண்டார். இவர்தான் எப்படியும் பார்ப்பன ஜெயலலிதா ஆட்சிக்கு வரக்கூடாது என்றும், நடப்பது பார்ப்பன ஆட்சிதான் என்றும் வரிந்த கட்டிக் கொண்டு வாதாடினார். ஜெயலலிதாவை எதிர்த்து தி.மு.க-வுடன் கூட்டுச் சேராததற்காக பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக வக்கணை பேசினார்.

யாரும் எதிர்பாராத நேரத்தில் இப்படிப்பட்ட துரோகத்தைச் செய்தார், வீரமணி. பெரியார் திரட்டிவைத்த பல கோடி சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வருவதோடு விடுதலைப் புலிகளது வசதி வாய்ப்புகளையும் பயன்படுத்துவதற்காக அவர்களது தீவிர ஆதரவாளராக வலம்வந்து கொண்டிருந்தவர்தான் இந்த வீரமணி. ஆனால், ஈழப் போராளிகள், அகதிகள் மீதும், ஈழ ஆதரவாளர் மீதும் அரசு பயங்கரவாதத்தை ஏவி ஜெயலலிதா கும்பல் கொலைவெறியாட்டம் போட்டுக் கொண்டிருக்கும்போதுதான் இவ்வாறு துரோகம் செய்தார், வீரமணி.

பச்சையான இன துரோகம் செய்து கொண்டே இன்னமும் தான் ஒரு ''தமிழினக் காவலர்'', ''தமிழர் தளபதி'', ''மானமிகு'' என்று பீற்றிக் கொள்ளுகிறார், வீரமணி. அவரது சமரச சந்தர்ப்பவாதத்தை, பித்தலாட்டத்தை, முன்னுக்குப் பின் முரணான இரட்டை வேடத்தை அவரது சொந்த வாக்குமூலங்களினாலேயே இங்கே அம்பலப்படுத்துகிறோம். வாசகர் கேள்விகளுக்குப் பதிலாகவும் தலையங்கமாகவும் ''உண்மை'' ஏட்டில் வீரமணி தெரிவித்த கருத்துக்களே இவை:

## ஜெயாவிடம் சரணடையும் முன் ''பகுத்தறிவாளர்'' வீரமணியின் கருத்து

''அ.இ.அ.தி.மு.க வில் பிளவு ஏற்பட்டு இ.காங்கிரசு ஆதரவுடன் ஜெயலலிதா முதல்வர் ஆனால், தமிழ் - தமிழன் நிலை என்ன ஆகும்?

''1916க்குச் செல்லும் நிலை ஆகும்!''

*— ஆதாரம் உண்மை ஏடு '85 டிசம்பர் 1.*

★ ★ ★

செல்வி ஜெயலலிதா என்ற ஒரு அய்யங்காரப் பெண் அ.இ.அ.தி.மு.க. வில் திணிக்கப்பட்ட கால முதல் அக் கட்சியில் கலகங்கள் ஆவேசமாகப் பிறக்க ஆரம்பித்தன.

திராவிடர் இயக்க உணர்வு கிஞ்சிற்றும் இல்லாத அந்தப்பெண்மணி, சினிமா உலகில் எம்.ஜி.ஆருக்கும் அவருக்கும் ஏற்பட்ட ''நெருக்கத்தின்'' காரணமாகவே கட்சியில் சேர்க்கப்பட்டது மட்டுமல்லாமல், கொள்கை பரப்புச் செயலாளர் என்கிற பெரிய இடத்திற்கு முடிசூட்டவும் பட்டார்.

நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு ஒரு ஆடு கேட்கும் என்று சொல்வதைப் போல, தகுதிக்கு மேலான இடத்தில் திணிக்கப்பட்ட செல்வி ஜெயலலிதா அம்மையார் கட்சியில் மூத்த தோழர்களை எல்லாம் மிக அலட்சியமாக நடத்த ஆரம்பித்தார். தமது ஆட்டும் விழிக்கு ஆடும் நடிகராக எம்.ஜி.ஆர் இருப்பதுதான் அந்தத் தலைகனத்துக்கு அடிக்கோலாகும்.

அந்த அம்மையார் அதற்கு அடுத்த கட்டமாக மாநில அவைக்கு அனுப்பப்பட்டார். டெல்லி 'எசமானர்களின்' நெருக்கம் அந்த அம்மையாருக்கு ஏற்பட்டது. ஏற்கெனவே டெல்லி காங்கிரஸ் கழுகு தமிழ்நாட்டு அரசியலை நோட்டம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த அம்மையார் வசமாகச் சிக்கினார் என்றதும், அவரை வைத்து தமிழக ஆட்சியைக் குட்டை குழப்பும் காரியத்தில் அது தொடர்ந்து ஈடுபட்டுவிட்டது.

எம்.ஜி.ஆர். உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு, மீண்டும் அவர் பிழைப்பது அரிதினும் அரிது என்று எல்லோரும் கைவிசைந்து கொண்டிருந்த கால கட்டத்தில் செல்வி ஜெயலலிதா அம்மையார் வெளியிட்ட அறிக்கைகளும், விமர்சனங்களும் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டவை. ஆட்சியை டெல்லிக்குக் காட்டிக் கொடுக்கும் இரண்டக நடவடிக்கையாகும்.

பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றம் என்ற உணர்வில் உண்டாக்கப்பட்ட தென்னிந்தி நலவுரிமைச் சங்கம், அதன் பரிணாம வளர்ச்சியான திராவிடர் கழகம் - இவற்றின் உயிர்காக்கும் கொள்கைகளிலிருந்து முற்றிலுமாகத் தம்மை விடுவித்துக்கொண்டு, இன்றையதினம் ஒரு அய்யங்காரப் பெண்ணினிடத்திலேயே ஆட்சியையும், கட்சியையும் ஒப்படைத்து விடலாம் என்கிற அளவுக்கு நிலைமை புரையோடிப் போனதற்குக் காரணம் - கொள்கை ரீதியாகக் கட்சிக்கு வராமல், வெறும் ''கணக்குப் போட்டுக் கொண்டு'' நுழைந்த ஒரு சினிமா நடிகரை புரட்சி நடிகராக்கி, அதன்பின் புரட்சித் தலைவராக்கிய பேதமைதான்!

தந்தை பெரியார் அவர்கள் தமிழ் மண்ணில் ஏற்படுத்தி இருக்கிற இன உணர்வு, பகுத்தறிவு உணர்வு, ஆதிக்க எதிர்ப்பு உணர்வுகளை, இனி ஒரு தேசிய இயக்கத்தால் சமாளிக்க முடியாத என்ற நிலையில், பெரியார் பெயரையே சொல்லிக் கொண்டு திராவிடர் இயக்கம் என்ற பேரிலேயே நடமாடிக்கொண்டிருக்கின்ற - பாமர மக்களின் அபரிமிதமான ஆதரவைத் தம்பக்கம் வைத்துக் கொண்டிருக்கின்ற சினிமா நடிகரைக் கை ஆயுதமாகப் பயன்படுத்தி காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்கிற அவசர உணர்வு மத்தியில் ஆளும் காங்கிரசுக்கு இருக்கிறது.

*உண்மை ஏடு '89 நவம்பர் 1 பக்.2-3*

★ ★ ★

தமிழக அரசியலில் முதலமைச்சர் பதவிக்கு வரத்துடிக்கும் அய்யங்கார் பார்ப்பனரான ஜெயலலிதாவும், வெளியிலே தனது வகுப்புவாதத்தைக் காட்டிக்கொள்ளாத ஒரு தந்திரமான பார்ப்பன அம்மையார்! திராவிட இயக்கத்துக்குள்ளேயே ஊடுருவி பார்ப்பன சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த திட்டமிட்டு செயலாற்றி வருகிறார். தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும், இவரை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கின்றன.

காஞ்சிபுரம் மடத்திலிருந்து ஜெயேந்திரசரசுவதி, யாருக்கும் தெரியாமல் ஓடிப்போனபோது, உடனடியாக காஞ்சிபுர மடத்துக்குச் சென்றாவர் இந்த ஜெயலலிதா. இந்த தகவலை 'சண்டே' பத்திரிகை அம்பலப்படுத்தியது.

*ஆதாரம் உண்மை ஏடு '89 மே 15-30 பக்.31*



படிப்பகம்

www.padippakam.com



**ஒரு பார்ப்பனர் நாத்திகனாக இருந்தால்கூட உங்கள் இயக்கத்தில் சேர்க்க மாட்டீர்களா?**

நிச்சயமாக சேர்க்க மாட்டோம். அந்த ஊடுருவலில் ஆபத்து அடங்கி இருக்கின்றது. இன்றைக்கு அ.இ.அ.தி.மு.க-வின் கதி என்ன? ஜெயலலிதா என்ற பார்ப்பனப் பெண் அதில் ஊடுருவி உள்ளுக்குள் இருந்தே கட்சியை உடைத்துவிட்டார். அரசியலில் வேண்டுமானால் இவைகள் நடக்கலாம். ஆனால் எங்கள் இயக்கத்தில் எங்களால் அனுமதிக்க முடியாது. ஆனாலும் தனிப்பட்ட முறையில் எந்த பார்ப்பனரும் எங்களுக்கு எதிரியல்ல.

*ஆதாரம் உண்மை ஏடு '90 டிசம்பர் 1-15. பக்.22.*

★ ★ ★

**ஆரியத்தின் முகமூடியை மக்கள் கிழிப்பார்கள்**

திராவிட இயக்கம் எனும் முகமூடியை அணிந்து கொண்டு தமிழக ஆட்சியைப் பிடிக்க, பார்ப்பனர்கள் திட்டமிட்டு வருகிறார்கள்! பார்ப்பன அம்மையார் ஆட்சியை தமிழகத்தில் அமைப்பதன் மூலம், தங்களின் ஆட்சியை உருவாக்கிக்கொள்ளும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்ற நம்பிக்கையோடு பார்ப்பனர்கள் இருப்பது நன்றாகவே புரிகிறது! இதன் காரணமாக - அந்தப் பார்ப்பன அம்மையார், சில பார்ப்பனர்களையும் தமது கட்சி வேட்பாளராக நிறுத்தி வைத்திருக்கிறார். குடந்தையிலே அ.இ.அ.தி.மு.க சார்பில் நிறுத்தப்பட்டுள்ள ஒரு பார்ப்பனர் - பார்ப்பன இறுமாப்பை சித்தரிக்கும் சின்னங்களோடு - தான் ஒரு பார்ப்பனர் என்பதை பெருமையோடு பிரகடனப்படுத்திக் கொள்ளும் வகையில் உச்சிக் குடுமி சகிதமாக காட்சி அளிக்கிறார்!

திராவிடர் இயக்கம் என்பதே - பார்ப்பனரல்லாதார் இயக்கம் தான். பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து திராவிடர்களின் உரிமைக்காகத் துவக்கப்பட்ட ஒரு இயக்கத்தின் வாரிசு என்று கூறிக்கொண்டு, பார்ப்பன சக்திகள் இப்போது களத்துக்கு வந்து நிற்கின்றன! புத்தர் இயக்கத்தை எப்படி ஊடுருவி அழித்தார்களோ அதுபோல, ஒரு முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைக்கிறார்கள்! ஆனால், நிச்சயமாக புத்தர் இயக்கத்துக்கு ஏற்பட்ட கதி இப்போது திராவிடர் இயக்கத்துக்கு ஏற்பட்டுவிடாது என்பதை மட்டும், குன்றத்தின்மீது ஏறி நின்று உறுதியாக நாம் கூறுகிறோம்! திராவிடர் கழகம் என்ற தந்தை பெரியாரின் தத்துவங்களை ஏந்தி நிற்கும் - தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்ட இயக்கம், இந்த ஆபத்துகளை முறியடிக்கும் கொள்கை வலிமையோடு, தன்னலமற்ற உறுதியான தொண்டர்களின் அடித்தளத்தோடு - தடம் புரளாத, தெளிவான, உறுதியான தலைமையின்கீழ் நிமிர்ந்து நின்று கொண்டிருக்கிறது என்பதை பார்ப்பன சக்திகள் புரிந்து கொள்ளவேண்டும்! சமூகநீதி தத்துவத்துக்கு எதிரான காங்கிரஸ் கட்சி - பார்ப்பன ஆதிக்க சாம்ராஜ்யத்தை நாட்டில் நிலைநிறுத்தி வந்த காங்கிரஸ் கட்சி. இப்போது, இந்தப் பார்ப்பனத் தலைமையுள்ள கட்சியோடு அணி சேர்ந்துகொண்டு, தமிழக தேர்தல் களத்துக்கு வருகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை சாசனமான மண்டல் பரிந்துரையை 11 ஆண்டு காலம் குப்பைத் தொட்டியில் வீசிப்போட்ட அதே காங்கிரஸ் ஆட்சியை அமைக்க துணை போகும் இந்த அ.இ.அ.தி.மு.க., பிற்படுத்தப்பட்ட மக்களை ஏமாற்ற, தாங்களும் மண்டல் பரிந்துரையை ஆதரிப்பதாக, தனது தேர்தல் அறிக்கையில் கூறி பாசாங்கு காட்டுகிறது!

சமூகநீதி தத்துவத்தை அமுல்படுத்திய ஒரே காரணத்துக்காகவே பார்ப்பன சக்திகளும் - மதவெறி சக்திகளும் தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்தன! நாடாளுமன்றத்தில் நம்பிக்கை ஓட்டு கோரிய வி.பி.சிங், சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மைக் கொள்கையை முன் வைத்தார்! யார், யார், எந்தப் பக்கத்தில் நிற்கிறார்கள் என்பதை நாடு அடையாளம் காணவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், வி.பி.சிங் நம்பிக்கை ஓட்டு கோரினார். அப்போது அ.இ.அ.தி.மு.க. சமூகநீதியை எதிர்க்கும் அணியில் சேர்ந்துக்கொண்டு - வி.பி.சிங் ஆட்சிக்கு எதிராக வாக்களித்தது என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

அய்ந்தாண்டு காலம் ஆட்சி செய்வதற்கான உரிமையை மக்களிடம் பெற்று - பெரும் வெற்றியோடு ஆட்சி பீடமேறிய தி.மு.க. ஆட்சியை, இரண்டே ஆண்டுகளில் முறைகேடாகக் கலைத்துவிட்டு, இன்று மீண்டும் தமிழ்நாட்டு மக்களிடம் வாக்கு கேட்க வரும் அ.இ.அ.தி.மு.க - காங்கிரசின் சுயரூபங்களை, மக்கள் மறந்துவிடமாட்டார்கள். தி.மு.க. ஆட்சியைக் கலைத்தே ஆகவேண்டும்; இல்லையேல், சந்திரசேகர் ஆட்சிக்குத் தரும் ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என்று மிரட்டி, ஆட்சியைக் கலைக்க வைத்த இந்த பார்ப்பன அம்மையார் தலைமையிலான கட்சி, திராவிடர் இயக்கத்தின் கொள்கைகளுக்கும், திராவிடர்களின் இனமானத்துக்கும், சுயமரியாதைக்கும் சவால்விட்டுக் கொண்டு கிளம்பியிருக்கிறது.

*ஆதாரம் உண்மை ஏடு '91 மே 1-15. பக்.2.*

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா ஆதரவுக்கு வீரமணி சொல்லும் காரணங்களும் வக்காலத்தும்

தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு வேண்டும் என சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டிருப்பது வெறும் கண்துடைப்பா? வேதாகமப் பள்ளியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட்டும் என கூறியிருப்பது நடைமுறைப்படுத்தப்படுமா?

தி.மு.க. ஆட்சியில் மண்டல் கமிஷன் இட ஒதுக்கீட்டை ஆதரித்து 27 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு தீர்மானம் போட்டார்கள்; ஆதரித்தோம். வரவேற்றோம்.

அதைப்போலவே முதல்வர் ஜெயலலிதா அவர்களிடம் வனக்கதிற்குரிய தமிழினக் காவலர் வேண்டுகோள் வைத்தார். அதன்படி 50 சதவிகித இடஒதுக்கீட்டை வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றினார். இதையும் வரவேற்போம்.

இந்த தீர்மானம் நிறைவேற்றி இரண்டொரு நாள்களுக்குப் பிறகு இந்து (ஆங்கில) பத்திரிகை நிருபர் முதல்வரை பேட்டி கண்டார். அப்போது இப்படி தீர்மானம் நிறைவேற்றியது மத்திய அரசுடன் மோதலாகாதா? என்று கேட்டதற்கு முதல்வர் அவர்கள் 'எங்கள் மக்கள் உணர்வை நாங்கள் பிரதிபலித்தோம். இது மத்திய அரசுடன் மோதல்' என்று கருதப்பட்டால், அது அப்படியே இருக்கட்டும் என்று பதில் சொன்னதோடு, மற்ற மாகாணங்களிலும் மத்திய அரசிலும் இதேபோன்ற தீர்மானத்தை ஏன் நிறைவேற்றக்கூடாது? என்று கேட்டாரே. இந்து நிருபர் ஏதடா, வம்பாகப் போய் விட்டது என்று அடுத்த கேள்விக்குப் போய்விடாரே!

வேதாகமப் பள்ளியில் 18 சதவீதம் ஒதுக்கப்படும் என்று அரசு உத்திரவு போட்டபின், ஏன் சந்தேகம்? மற்றவர்கள் சந்தேகப்படுவதாக சொல்லுவதெல்லாம், இதைப்பற்றி அல்ல. படித்துத் தேர்ச்சி பெற்றுவந்தால், தாழ்த்தப்பட்டவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்களா! என்பதுதான். நிச்சயம் அமர்த்தப்படுவார்கள். இது தற்போது கேரளாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அமர்த்தப்பட முடியாது என்று நாமே பேசுவது நமது ஆசையையும் எதிரிக்கு எடுத்துக் கொடுப்பதாகவும்தான் முடியும். அப்படி ஒருநிலை ஏற்பட்டால், பார்ப்பனர்கள் தமிழ் நாட்டில் இருக்க மாட்டார்கள்.

இதே பதில்தான் மற்ற தோழர்கள். கேட்ட கேள்விக்கும்.

★ ★ ★

பகுத்தறிவுக்கு ஒத்துவராத, தேவையில்லாத வேதாகமக் கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவீதம் இடம் கொடுத்தாலும், அது எங்களுக்குத் தேவையில்லை என்ற கொள்கையில் உறுதியுடனிருப்பீர்களா? 'பிராமணம்' திணிக்கப்படுவதை அனுமதிப்பீர்களா?

கருஞ்சட்டைப்படை கடவுளை ஏற்காதவர்கள். ஆகவே அதில் நாங்கள் சேரவே மாட்டோம். தேவையில்லாத வேதாகமக் கல்லூரி என்றால் இப்பேது நடைமுறையில் பார்ப்பன பண்ணயமாக இருந்து வருவதை எதிர்த்து உங்கள் நிலை என்ன? 'புனிதம்' என்ற பெயரால் ஒரு இனம் மட்டில் கொள்ளை அடிப்பதைத் தடுக்கவும், அந்த இனத்துக்கு மட்டில் உரிமை' என்பதை அனைத்து சாதியினருக்கும் இந்த உரிமை வேண்டும் என்பதே நமது நோக்கம்.

இந்த நோக்கம் நிறைவேறினால் 'கடவுள் இல்லை' என்று நாம் மட்டில் சொல்ல வேண்டும் என்பதில்லை. 'பிராமண சங்கத்திலேயே தீர்மானம் போடுவார்கள். 'பிராமணம்' திணிக்கப்படுவதை எதிர்த்தே இந்த வேதாகமக் கல்லூரி.

*ஆதாரம் உண்மை ஏடு '91 டிசம்பர் 1-15 பக்.36*

★ ★ ★

அய்யா, தமிழகத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் வரவேற்க தகுந்ததே. ஆனால், அதில் அர்ச்சனை பயிற்சிப் பெற்ற திராவிடர்கள் தம் மொழியான தமிழ் மொழியால் கோயிகளில் அர்ச்சனை செய்வார்களா?

'தமிழில்தான்' என்று அரசு உறுதி கூறியுள்ளது.

எந்த மொழியாக இருந்தாலும் முதலில் தாத்தப்பட்ட மக்களுக்கு கதவு திறக்கப்படட்டும். பின்னர் மொழிப் பிரச்சினையைப் பார்த்துக் கொள்ளலாம்.

*ஆதாரம் உண்மை ஏடு '92 ஜன.1-15. பக்.23.*

★ ★ ★

தமிழ்நாட்டை ஆளுங்கட்சிக்கு கருஞ்சட்டை படையின் ஆதரவு முக்கியமா? அல்லது கருஞ்சட்டை படைக்கு ஆளுங்கட்சியின் ஆதரவு முக்கியமா? இதில் எது முக்கியம்?

யாருக்கும் யார் ஆதரவும் முக்கியமில்லை. தந்தை பெரியார் வழியில் நடக்கும் இயக்கமோ அல்லது ஆட்சியோ எதுவாக இருந்தாலும் தமிழ் நாட்டில் மக்கள் ஆதரவு இருக்கும். மக்கள் ஆதரவு தான் முக்கியம்.

*ஆதாரம் உண்மை ஏடு '92 மார்ச் 1-15. பக்.2*

# ஜெயலலிதாவும் கருணாநிதியும் ஒன்றுதான் என்ற வீரமணியின் வாதம்

''கும்பகோணம் மகாமகத்திற்கு தமிழக முதல்வர் ஒன்னேகால் கோடி ரூபாய் ஒதுக்கியது சரியா?

''எந்த ஆட்சிதான் கொடுக்கவில்லை. அதை செய்யக்கூடாத தி.மு.க-வே தங்கள் ஆட்சியில் இருந்தபோது கோயில்களுக்கு செய்ததையும் குளத்தில் தூர்வாரியதையும் அல்லவா பெருமையாக பேசுகிறார்கள். யாராவது ஒரு நல்லவர் இதையெல்லாம் தடுக்கவேண்டும்''

*— ஆதாரம் உண்மை ஏடு '92 பிப்ரவரி 1-15. பக்.15.*

★ ★ ★

''மகாமகத் திருவிழாவிற்குச் செலவிட்ட தொகையை ஒரு தொழிற்சாலை அமைக்க... ஒரு மருத்துவமனை நிறுவ... ஒரு கல்லூரி கட்ட செலவிட்டிருந்தால்?

''நீங்கள் விரும்புகிறபடி செய்தால் நன்றாகத்தான் இருக்கும். மக்கள் நல்வாழ்வைவிட அவர்களிடம் உள்ள வாக்குகளைப்பற்றி குறிப்பாக அடுத்த தேர்தலைப் பற்றித்தானே அரசியல்வாதிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? மகாமகம் போன்ற மத சம்பந்த விழாக்கள் தடை செய்யப்பட்டாலே நாட்டுக்கு லாபம்தானே? ''இதை எதிர்க் கட்சிகளே சொல்லத் தயங்கும்போது எந்த அரசு முன்வரும்?''

★ ★ ★

''விடுதலைக் குயில்கள்' நடத்த இருந்த தமிழர் ஒற்றுமை மாநாட்டைத் தடை செய்துள்ளதே தமிழக அரசு. இதைப்பற்றி?

''தவறுதான். பொதுச் செயலாளரின் கண்டன அறிக்கை எல்லாப் பத்திரிகைகளிலும் வந்துள்ளதே.

''எந்த ஆட்சி வந்தாலும் இப்படிப்பட்ட மாநாட்டை அனுமதிக்காதது நமக்கு ஒரு குறையே.

''தங்கள் பதவியைப் பற்றி கவலைப்படாமல் மக்கள் உணர்வைப் பற்றி கவலைப்படும் ஆட்சி வரவேண்டும். வருமா?

★ ★ ★

பரிதி இளம்வழுதி போன்றவர்களை சட்டமன்றத்தில் சாதிப் பெயரைச் சொல்லி திட்டுவது எதைக் காட்டுகிறது?

சாதிப் பெயரைச் சொல்லிச் சொன்னதாக சிலரும், சொல்லவில்லை என்று வேறு சிலரும் சொல்கிறார்கள். சொல்லி இருந்தால் சொன்னவர் ஒரு இந்து மதவெறியன் அல்லது ஒரு முட்டாள் என்று ஆகிறது. நமது பிரச்சாரம் அங்கும் தேவை என்பதைக் காட்டுகிறது.

*ஆதாரம் உண்மை ஏடு '91 அக்டோபர் 15-31.*



படிப்பகம்

www.padippakam.com

## ஜெயாவிடம் சரணடைந்தபின் வீரமணியின் மழுப்பலும் பாய்ச்சலும்

தமிழ்நாட்டில் நடக்கும், நடக்கப்போகும் பார்ப்பனர் ஆட்சியில் கண்டிப்பாக தமிழன் உரிமை பறிக்கப்படும். அப்போது தங்கள் இயக்கம என்ன செய்யும்?

**திராவிட இன உணர்வின் பேரால் ஆட்சிக்கு வந்தவர்கள் தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள பார்ப்பனர்களுக்கு வேண்டியவர்களைக் காட்டிக் கொள்வதில்லையா. அதுபோல் பார்ப்பனர் ஆட்சியில் நமக்கு வேண்டியவர்களாகக் காட்டிக் கொள்ள செய்கையில் இருந்தால் என்ன செய்வது? பொறுத்திருந்து பார்ப்போம். ஒருககால் நீங்கள் நினைப்பது போல் தமிழன் உரிமை பறிக்கப்பட்டால் நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். கருப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்.**

☆ ☆ ☆

பார்ப்பனர் ஆதிக்கம் ஒழிக என்று எங்களுக்குக் கட்டளையிடும் அய்யா அவர்கள், ஒரு பார்ப்பனியப் பெண்ணுக்குப் பொன்னாடை போர்த்தியது ஏன்?

**பெரியார் நினைவிடம் என்பது பெரியார் திடலில் உள்ளது. அங்குதான் நமது தலைமை அலுவலகம் உள்ளது. அங்கு வரும் யாரையும் வரவேற்பதுதானே பண்பு. இது ஒன்றும் புதிதல்ல.**

**ஏற்கனவே ராஜீவ் காந்தி அவர்கள் பதவியில் இல்லாதபோது பெரியார் திடலுக்கு வந்தபோது நாம் ஆடை போர்த்தவில்லையா? நம்மை மதித்து நம் இடத்துக்கு சங்கராச்சாரி வந்தாலும் வரவேற்போம். அதனாலேயே அவருடைய கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டது ஆகாது.**

**ஒன்றை நன்றாக நினைவில் வையுங்கள். பெரியாரை மதிப்பவரை நாம் மதிப்போம். பெரியாரின் கொள்கைகளுக்கு ஆதரவாக இருந்தால் அந்த ஆட்சியையும் நாம் மதிக்கின்ற காலம் வரும்; யார் ஆளுகிறார் என்பதைவிட, எப்படி ஆளுகிறார் என்பதுதான் முக்கியம். பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதுதவிர திராவிடர் கழகத்துக்கு வேறு பணி கிடையாது. தி.க.வை சந்தேகிப்பதால் நம் இனத்துக்குத்தான் நட்டமே தவிர, தி.க.வுக்கு அல்ல.**

***ஆதாரம் உண்மை ஏடு '91 ஆக. 15-31 பக்.4***

☆ ☆ ☆

நீங்கள் விடுதலைப் புலிகள் தீவிர ஆதரவாளர். ஜெயலலிதா விடுதலைப்புலிகள் தீவிர எதிர்ப்பாளர். நீங்கள் இருவரும் ஒரே மேடையில் பேசியது உங்கள் இயக்கத்தின்மீதும் உங்கள் மீதும் வைத்திருந்த தொண்டர்கள் மத்தியில் கொள்கை பற்று குறையுமா? இல்லை குறையாதா?

**நிச்சயம் குறையாது. திராவிடர் கழகத் தொண்டர்கள் மட்டுமல்ல; அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியாரும், தமிழினக் காவலர் வீரமணி அவர்களை அறிந்தவர்கள்.**

**பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்கு நன்மை விளையும் என்று நம்பினால் சங்கராச்சாரியாருடன்கூட ஒரே மேடையில் தோன்றுவார் என்று கழகத் தோழர்களுக்குத் தெரியும்.**

**எல்லோருக்கும் ஒரே கொள்கை இருக்கவேண்டும் என்றால் இத்தனை கட்சிகளுக்கு அவசியமில்லையே. தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் கொள்கை வித்தியாசமில்லை என்பதை இருவரும் ஒப்புக் கொள்கிறார். ஆனால், இருவரும் திராவிடர் கழகத்தோடு 'திராவிடர்' என்பதில் 'ர்' என்ற எழுத்தை ஏற்க மறுப்பவர்கள்.**

**பார்ப்பனத் தலைமை இரு கட்சிகளிலும் ஏற்பட வாய்ப்புண்டு. ஏனெனில், இருவருமே பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டதில் பெருமைப்படுபவர்கள். இன்றைய கால கட்டத்தில் இருவருமே 'விடுதலைப் புலி' எதிர்ப்பாளர்கள். ஆகவே, தி.மு.க. தலைவருடன் மேடையில் நிற்கும் போது அ.தி.மு.க. தலைவருடன் ஏன் மேடையில் நிற்கக்கூடாது. இருவர்களுக்குள்ளும் பதவிச் சண்டையே தவிர கொள்கைச் சண்டை இல்லை.**

★ ★ ★

பெரியார் அறக்கட்டளைக்கு பணம் கொடுத்த கூட்டத்தில் பொதுச் செயலாளர் அவர்கள், ''சமூகப் புரட்சியில் நீங்கள் ஈடுபடும்போது உங்கள் பின்னால் கருஞ்சட்டைப் பட்டாளம் இருக்கும்'', என்று கூறியதன் கருத்து என்ன? நாங்கள் குழம்பிக் கொண்டிருக்கிறோம்.

**இதில் என்ன குழப்பம்? மண்டல் கமிஷன் அறிக்கை அமுல்படுத்துதல், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக்கும் ஆணை, பெரியாரைப் பற்றி ஆரம்ப வகுப்பு முதல் பாடத் திட்டத்தில் சேர்த்தல், இவைகளுக்கு வழி செய்தால் அதனால், உங்களுடைய ஆட்சிக்கு தொந்தரவு வருமேயானால் உங்கள் பின்னால் கருஞ்சட்டைப் பட்டாளம் இருக்கும்; என்கிறார். இந்தக் காரியங்களுக்காக பல போராட்டங்களை நடத்திய ஒரு இயக்கம், அதை யார் செய்தாலும், அதனால் அவருக்கு தொந்தரவு ஏற்பட்டால் அவருக்குப் பினனால் ஆதரவாக நிற்பதுதானே ஒரு நாணயமான இயக்கத்தின் கடமை.**

***ஆதாரம் உண்மை ஏடு '91 அக்டோபர் 15-31 பக்.4***

★ ★ ★

பார்ப்பனிய எதிர்ப்பு என்ற ஆயுதத்தைத் தீவிரமாக தி.மு.க. கையில் எடுக்கும்போது தி.க. அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தவில்லை என்று கருதப்படுவது ஏன்?

- *ஜெயா ஆட்சிக்கு வந்தால் 1916-ன் நிலை ஆகிவிடுமென்று அன்று வீரமணி சொன்னார். திராவிட இயக்கத்திற்குள் ஊடுருவ முயற்சிக்கும் பார்ப்பன சூழ்ச்சி, காங்கிரசின் சூழ்ச்சி வடிவமே ஜெயா என்றார். ஆர்.எஸ்.எஸ். சதிகார கும்பலின் சக்திதான் ஜெயா என்றார்.*

  *ஆனால் இன்றோ தந்தை பெரியாரை மதித்து, அவரது கொள்கைகளை அமுல்படுத்துகிறார் ஜெயலலிதா என்கிறார்.*

- *ஜெயா ஆட்சி பார்ப்பன ஆட்சியே என்ற பிராமண சங்கக் கடிதத்தை அன்று வெளியிட்டார் வீரமணி.*

  *ஆனால் இன்றோ ஜெயா ஆட்சி பார்ப்பன ஆட்சி அல்ல என்று சான்றிதழ் கொடுக்கிறார்.*

- *எம்.ஜி.ஆர். ஆட்சி பார்ப்பனர்களின் பொற்காலம் என்றும் எம்.ஜி.ஆர். ஒரு சாடிஸ்ட், பாசிஸ்ட் என்றும் அன்று எழுதியவர் இன்று ஜெயா ஆட்சியைக்கூட அப்படிப்பட்டதல்ல என்கிறார்.*

- *பார்ப்பன பாசிச ஜெயலலிதா ஆட்சியும் கட்சியும் கருணாநிதியின் கட்சி ஆட்சியைப் போன்றதே என்று சமப்படுத்தி ஜெயாவிற்கு வக்காலத்து வாங்குகிறார்.*

***இவையெல்லாம் வீரமணியின் மேற்கண்ட வாக்குமூலங்களை ஒப்பிடும்போது அறியலாம். ஆகவே வீரமணி ஒரு பகுத்தறிவாளி அல்ல; ஒரு பச்சோந்திதான் என்பது நிருபனம் ஆகிறது.***

படிப்பகம்

www.padippakam.com

நாம் எப்போதும் பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள்தான். தீவிர மாக (நீங்கள் சொல்வதுபோல்) யார் செய்தாலும் அதை வரவேற் போம். திடீரென்று தீவிர மாவதும், மற்ற நேரங்களில் எதிரான கருத் தைச் சொல்வதும் ஆடத்தானது.

★ ★ ★

'விடுதலை' நாளிதழ் தினமணி போலவும், முரசொலி நாளிதழ் விடுதலை போலவும், தெரிகிறதே ஏன்?

அப்படியா! அது அவரவர்கள் கண்களைப் பொறுத்தது. இப் போது எங்கும் 'சென்னை அய்' பரவியுள்ளதே. உங்கள் கண்களைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

★ ★ ★

ஜெயலலிதாவிற்கு எதிராக பார்ப்பனப் பிரச்சாரம் செய்ததே நீங்கள். ஆனால் இன்று அய்ந்து லட்சம் நிதி தந்தார் என்பதற்காக ஜெயலலி தாவுடன் மேடையில் விழா நடத்துகிறீர்கள். அரசியல் வேறு; சாதி வேறா... பார்ப்பன சூழ்ச்சி வலையில் எப்படி சிக்கினீர்கள்...? (அதற்காக ஜெயலலிதாவை எதிர்க்கச் சொல்லவில்லை) நீங்கள் பார்ப்பனியத்தை வளர்த்து விடுகிறீர்கள். தி.க. செய்ய வேண்டி யதை இனி தி.மு.க. செய்யலாமே... உங்கள் அறியாமைக்கு வருந்து கிறோம்.

நாமோ தேர்தலுக்கு நிற்பதில்லை. நாமோ பதவிக்குப் போவ தில்லை. அப்படிப்பட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? சிந்தியுங் கள்.

யார் (ஒருக்கால் கெட்ட வாய்ப்பாக ஜனகல்யாண் தலைவர் சங்கரச் சாரி) ஆட்சிக்கு வந்தாலும் அவர்களிடம் வேலை வாங்குவது தானே நம் கடமை. நாம் வெறும் வீம்புக்காகவா இயக்கம் நடத்துகி றோம்.

ஆனால், நாம் பார்ப்பனர் ஆதிக்கத்தை, மூடநம்பிக்கையை இன்றும் எதிர்த்து வருகிறோம். 'விடுதலை'யை தொடர்ந்து படியுங் கள். 'உண்மை'யிலும் பாருங்கள்.

நமக்கு எதிராக உள்ள 'பிராமண சங்கம்' 'லபோ, லபோ' என்று கத்துகிறதே - அதில் இருந்தே தெரியவில்லையா?

தி.மு.க. செய்தாலும் அல்லது யார் செய்தாலும் வரவேற் போம். வணக்கத்திற்குரிய நம் பொதுச் செயலாளர் அவர்கள் 'விடுத லை'யில் ஒரு நண்பரின் கேள்விக்கு தி.மு.க. வின் பார்ப்பனர் எதிர்ப்புப் பணியை வரவேற்றுள்ளாரே. அத்துடன் அது தாற்காலிக மாக இல்லாமல் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளாரே.

மறுபடியும் பெரியார் அறக்கட்டளைக்கு யார் நிதி கொடுத்தா லும் பெற்றுக்கொள்வோம். நம் பொதுச் செயலாளரை விலைக்கு வாங்க எவனும் பிறக்கவில்லை.

*ஆதாரம் உண்மை ஏடு '91 நவம்பர் 16-31. பக்.8*

★ ★ ★

ஈரோட்டுக் கண்ணாடியின் பார்வையில் இதுவரை நடந்த அ.இ. தி.மு.க. ஆட்சியின் சாதனைகளும் வேதனைகளும் என்ன?

தடா வழக்குகளும், பத்திரிகைகள்மீது கடும் நடவடிக்கைக ளும் வேதனை. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று அறிவித்ததும், மண்டல் கமிஷனில் 50 சதவீதம் வற்புறுத்தியதோடு பொருளாதார வரம்பு கூடாது என்று வற்புறுத்தியதும் சாதனை.

★ ★ ★

இன்றைய ஆட்சிக்காலம் "பார்ப்பனர்களின் பொற்காலம்" எனக் கூறப்படுவதுபற்றி என்ன நினைக்கீறீர்கள்?

பார்ப்பனர்களும் முதலில் அப்படித்தான் எண்ணினார்கள். ஆனால் நடைமுறையில் வித்தியாசமாகத் தெரிந்ததால்தான் சங்க ராச்சாரி முதல் மற்ற பத்திரிகை பார்ப்பனர்கள் வரை எதிர்க்கிறார்கள்.

*ஆதாரம் உண்மை ஏடு '92 மே 16-31. பக்.6*

## வீரமணியின் கருத்துப்படி எம்.ஜி.ஆர் ஆட்சியைவிட ஜெயா ஆட்சி மேலானதுதான்!

இன்று நமது இயக்கத்திற்குத் தோன்றியுள்ள அறைகூவல்கள் கொஞ்சநஞ்சமல்ல! பல்வேறு முனைகளிலும் பரவலாகப் போராட வேண்டிய பொறுப்புமிகுந்த பணி நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது!

அ.இ.அ.தி.மு.க. ஆட்சி என்ற காலம் - தமிழ் நாட்டிற்கும் தமிழர்களுக்கும், பகுத்தறிவுக் கொள்கையாளர்கட்கும் மிகவும் வேதனைப்பட வேண்டிய துயரமிகுந்த இருண்டகாலம் ஆகும்!

இருண்டகாலம் என்று ஏன் சொல்ல வேண்டியுள்ளது தெரி யுமா?

1. திராவிடப் பாரம்பரியம் என்பதற்கு மூலக்கொள்கையான வகுப்புரிமைத் தத்துவத்திற்கு, சமூக நீதி (Social justice) என்பதற்கு வேட்டு வைத்து, பார்ப்பனர்கள் எண்ணப்படி, பொருளாதார அடிப் படை, 9,000 ரூபாய் வருமான வரம்பு ஆணை, நுழைவுத் தேர்வு 'தகுதி' 'திறமை' வாய்ப்பாடு இவைகள் இவ்வாட்சியினரால் அமுல் படுத்தப்பட்டு, தமிழர் உரிமைகள் தரைமட்டமாக்கப்படுகின்றன!

2. தமிழர் என்ற உணர்வே ஏதோ குற்றத்திற்குரிய ஒன்றாக ஆக்கப்பட்டு, தமிழ்நாட்டு பணிக்களம், கல்வித்துறை எல்லாம் பார்ப்பன - மலையாள - மற்றும் தமிழரல்லாதவரின் வேட்டைக்கள மாக, ஏகபோக சாம்ராஜ்யமாக நடைபெறும் அவலம்! திராவிட இயக்கத்தின் தோற்றுவாயே பார்ப்பனரல்லாதார் உரிமை என்பதை மழுங்கச்செய்ய, மறக்கச் செய்ய கட்டுப்பாடாக ஆட்சியாளர் முயற்சி!

### பகுத்தறிவுக் கொள்கைக்கும் பகைவர்கள்!

3. அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டி வளர்த்த இன உணர்வுக்கு மட்டுமல்லாமல் பகுத்தறிவுக் கொள்கைக் கும் எதிராக பகிரங்க போர்ப் பிரகடனத்தை எம்.ஜி.ஆர். ஆட்சியும் அதன் அமைச்சர்களும் பட்டாங்கமாய் பச்சையாய், கூச்ச நாச்ச மின்றி செய்துவரும் வெட்கக்கேடான நிலை!

சுயமரியாதை இயக்கத்தின் வேரையே அறுக்கும் வண்ணம் இப்பணிகளை எம்.ஜி.யாராலும், அவரது சகாக்களாலும், தொண்டரடிப் பொடியாழ்வார்களாலும் பார்ப்பன ஏடுகளின் விளம் பரம் சடகோபம் எதிர்பார்த்து நாள்தோறும் தவறாமல் நடைபெறு கின்றன!

பார்ப்பனத் தலைவரான சங்கராச்சாரியின் காலில் விழுந்து ஆசி கோரியும், மூகாம்பிகைக் கோயிலுக்குப் படையெடுத்தும், அய்யப்பனுக்கு வேட்டி கட்டியும், கும்பாபிஷேகம், கோயில் மந்திர உச்சாடணங்கள் இவைகளை அன்றாட நிகழ்ச்சிகளாக்கி, அய்யா - அண்ணா கொள்கைப் பயிரை இந்த வேர்ப்புழுக்கள் அழிக்க அன்றாடம் முனைகின்றன! முன்நின்றன!

### தூக்கி எறியப்பட்ட வேட்டி!

எங்கெங்கணும் கும்பாபிஷேகங்கள்! நடைபாதை திடீர்க்கோ யில்கள்! பார்ப்பன பாதபூஜைகள், உச்சக்கட்டத்தில் ஆட்சியாள ரால் நடத்தப்பட்டு மதச்சார்பின்மை (Secularism) என்பது தூக்கி எறியப்பட்ட வேட்டிபோல் ஆகி நிற்கிறது!

இவ்வளவும் அய்யா - அண்ணா படம் போட்டு ஆரியத்தைப் புடம்போட்டு நடத்தப்பெறும் மகா மானக்கேடான நிலை!

பார்ப்பனர்களின் பொற்காலம் என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டாகவும் இவை அமைந்துள்ளன!

*ஆதாரம் உண்மை ஏடு '84 அக்டோபர் 1. பக்.4-5.*

★ ★ ★

***(இன்று சொத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜெயல லிதாவிடம் சரணடைந்துள்ள வீரமணி எம்.ஜி.ஆர். ஆட் சியின்போது எழுதிய தலையங்கமே மேற்கண்டது).***



படிப்பகம்

www.padippakam.com

உயிரையும் பொருட்படுத்தாது மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபடுவதையும் உலகுக்குக் காட்டும் துணிவான முயற்சியில் வெளிவந்த படம். லண்டனில் நடந்த உலகப்பட விழாவிலும், சென்ற ஆண்டு சென்னையில் நடந்த உலகப் படவிழாவிலும் திரையிடப்பட்டது.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுளாக இப்படத்தை ஒளிபரப்ப மறுக்கிது தூர்தர்ஷன் நிர்வாகம். திரு பட்வர்த்தன் நேரடியாக விசாரித்தபோது பட நகல் தொலைந்துவிட்டது எனப் பதில் கூறினர். மீண்டும் ஒரு நகலை தொலைக் காட்சி நிலையத்திற்குக் கொடுத்தார். ஆனாலும் இன்று வரை ஒளிபரப்ப மறுக்கின்றனர். இதை எதிர்த்து தொலைக் காட்சி மீது வழக்கு தொடுத்துள்ளார் திரு. ஆனந்த பட்வர்த்தன்.

இதில் வேடிக்கை என்னவெனில் 1990-ல் இதே படத்திற்கு சிறந்த படம் என விருது வழங்கியது தூர்தர்ஷன்.

இந்தப் படத்தைத் திரையிட மறுப்பதற்கு ஒரே காரணம், இது இந்திய ராணுவம் பஞ்சாபில் நடத்தும் படுகொலைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும் என்பது தான்.

### மக்களுக்குப் பட்டினி சாமியார்களுக்குப் படையல்!

மத்தியப் பிரதேசம் உஜ்ஜயினியில் கடந்த மே மாதம் 'சிம்மஸ்தகும்பா' எனும் பெரிய இந்துத் திருவிழா கொண்டாடப்பட்டது. இது இந்த நூற்றாண்டில் நடைபெறும் கடைசி கும்பமேளா. இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என மத்தியப் பிரதேச பி.ஜே.பி. அரசு 100 கோடி ரூபாயை வாரி இரைத்துள்ளது. இதை பி.ஜே.பி. துணைத் தலைவர் குவாலியர் ராணி விஜயராஜே சிந்தியா முன்னின்று நடத்தினார். பாரதீய ஜனதாவில் இருக்கும் உட்கட்சி அசிங்கங்களை மறைக்கவும், முதல்வர் சுந்தர்லால் பட்வாவுக்கு எதிராக கலகம் செய்யும் இந்து மதவெறி சாமியார்களை சாந்தப்படுத்தவுமே இவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது.

ம.பி.யின் 45 மாவட்டங்களில் 28 மாவட்டங்கள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி, மக்களுக்கு குடிநீர் கூட இல்லாமல் பட்டினிச் சாவு அதிகரிக்கிறது. ஆனால் ஒரு சாதாரண திருவிழாவுக்கு 100 கோடியை தாராளமாக தண்ணீரில் கரைக்கிறது மக்களைக் கொன்று மகான்களுக்குப் படையலிடும் பி.ஜே.பி. அரசு.

### கல்லாமையை வளர்க்க காங்கிரசு திட்டம்

இந்தியாவிலேயே 100% கல்வியறிவு பெற்ற மாநிலமான கேரளாவில் 112 ஆரம்பப் பள்ளிகள் இக்கல்வியாண்டில் மூடப்பட்டுள்ளன. கிராமப்புற பள்ளிகளில் போதிய அளவுக்கு மாணவர்கள் வருகை இல்லாததால், இவற்றை நலிவடைந்த பள்ளிகளாக அறிவித்து மூடிவிட காங்கிரசு அரசு உத்திரவிட்டுள்ளது. கேரளாவில் உள்ள மொத்த பள்ளிகளில் 70% க்குமேல் தனியார் பிடியில் உள்ளது. எஞ்சியவற்றையும் தனியாருக்கு தாரை வார்த்துவிடும் நோக்கத்தோடு இப்போது அரசுப் பள்ளிகளும் மூடப்படுகின்றன.

### ஆயுதக் கொள்முதலில் அகிம்சாவாதிகளுக்கே முதலிடம்!

சுவீடனிலுள்ள ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் 1991-ம் ஆண்டறிக்கையின்படி, உலகிலேயே மிக அதிகமாக ஆயுதங்கள் வாங்கி கடந்த ஆண்டில் முதலிடம் வகிப்பது இந்தியாதான். கடந்த ஆண்டில் மட்டும் இந்தியா 200 கோடி டாலர் (6000 கோடி ரூபாய்) மதிப்புடைய ஆயுதங்களை இறக்குமதி செய்துள்ளது. பட்டினியால் பரிதவிக்கும் இந்திய மக்களிடம் சிக்கனத்தைக் கடைபிடிக்குமாறும் நாட்டுக்காக தியாகம் செய்யுமாறும் ஆட்சியாளர்கள் உபதேசிப்பது எதற்காக என்று இப்போது புரிகிறதல்லவா?



### கொலம்பசை எதிர்க்கிறார் மார்லன் பிராண்டோ!

அமெரிக்காவின் பிரபல திரைப்பட நடிகரான மார்லன் பிராண்டோ ''கொலம்பஸ் - புதிய கண்டுபிடிப்பு'' என்ற பிரம்மாண்டமான ஹாலிவுட் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு வந்த போதிலும் அதை மறுத்துவிட்டார். ''வட அமெரிக்க பூர்வகுடி மக்களை இனப் படுகொலை செய்த முதல் குற்றவாளிதான் கொலம்பஸ்; இதற்கேற்ப திரைக்கதையை வரலாற்று உண்மைகளுடன் கூறாவிட்டால் அது மனித இனத்துக்கே மாபெரும் அவமானம்'' என்கிறார் பிராண்டோ. அவரைக் கதாநாயகனாகப் போட்டு படம் எடுக்கப் போவதாக விளம்பரம் செய்த தயாரிப்பாளர்கள் கொலம்பசை எப்படி வில்லனாகக் காட்டுவது என்று புரியாமல் இப்போது கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

### புஷ்ஷுக்கு பனாமா மக்களின் செருப்படி!

போதை மருந்துக் கடத்தலைத் தடுப்பதாகக் கூறி கடந்த டிசம்பர் 1984-ல் பனாமா நாட்டின் மீது படையெடுத்து ஆக்கிரமித்த அமெரிக்காவை எதிர்த்து பனாமா மக்கள் மாபெரும் கிளர்ச்சியில் இறங்கியுள்ளனர். பிரேசில் நாட்டில் நடக்கும் புவி உச்சி மாநாட்டிற்குச் செல்லும் வழியில், பனாமாவுக்கு அமெரிக்க அதிபர் புஷ் வருகை தந்தார். ''ஆக்கிரமிப்பாளனே வெளியேறு!'' என்ற முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் செய்த பனாமா மக்கள், புஷ் பேசுவதற்கு ஏற்பாடு செய்திருந்த மேடையையும், அமெரிக்கக் கொடிகளையும் கொளுத்தினர். பனாமாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க ராணுவத்தின்மீது தாக்குதல் நடத்தி ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். புஷ் வருகையை ஒட்டி தடையுத்திரவு போடப்பட்டும்கூட அதையும் மீறி பனாமா மக்கள், சர்வதேச ரௌடிக்கு எதிராக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

### சுண்டூரிலும் அதே நாடகம்

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஆந்திராவிலுள்ள சுண்டூரில் சாதிவெறி பிடித்த நிலப்பிரபுக்கள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் 17 தலித்துகள் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள். பலர் படுகாயமடைந்தனர். இது பற்றி விசாரிக்க நீதிபதி கங்காதர ராவ் கமிஷனை அரசு நியமித்தது. கமிஷன்களால் நீதி கிடைக்காது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்த தலித்துகள் இந்த விசாரணைக் கமிஷனைப் புறக்கணித்தனர். எதிர்பார்த்தவாறே, தலித்துகளை வெட்டிக் கொன்று கால்வாயில் வீசிய கொலைகாரர்கள் யார் என்று தெரியவில்லை என இக்கமிஷன் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதே சமயம் தலித்துகள் அராஜகத்திலும் வன்முறையிலும் இறங்கியதாக குற்றம் சாட்டியுள்ளது. நிலப்பிரபுக்களின் கூட்டாளியான ஆந்திர காங்கிரசு அரசும் இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.No. 42647/85 Regd No. TN/MS (S) 376




துறை: வருவாய்த் துறை
திணை: அடிமைத் திணை

துரை.சண்முகம்

புலி'யை முறத்தாலடித்து
அகதிகளை வயிற்றிலடித்த
மறக்குல மங்கை
மதுரையில் பேரெழுச்சி

கண்ணிமையா தேவர்களும்
காணமுடியா ஒரு வாய்ப்பு
மண்ணின் மைந்தர்களே
கண்டு ரசிக்கலையோ?!

'வஞ்சின மாலை விடுத்து
வாக்காளப் பெருங்குடிகளே
காதிலுள்ள பூவெடுத்து
கையிலேந்திக் கொள்ளுங்கள்,
கனவுக் காட்சிகள்
இலவசம்! இலவசம்!

'கழக' அகராதியைக் கற்றுணர்ந்து
புதிய பொருளைப் புரிந்து கொண்டால்
'பொருள் வயிற் பிரிவு' சிறிதும் இல்லை.

காலாட் படையெனில்
காலில் விழுவது -
கூடி விழுந்தால் 'கோடி' நன்மை
சம்மதித்தால் சங்கப்பலகை
ஒத்துவர மறுத்தால் ஒட்டுத் திண்ணை.

பாணர்களே,
பாடல்களை மாற்றுங்கள்
வைகையைப் பாடினால் வரவுக்கு வழியில்லை
வற்றாதது கூவமென
வாழ்த்திப் பாடுங்கள்
'கடைச் சங்க கையிருப்பில்
கட்டாயம் பங்குண்டு.

கற்பில் சிறந்தவள்
கண்ணகியா? மாதவியா?
கதைக்க நேரமில்லை
அதிக விலை யாருக்கு?
புள்ளி விவரம் தெரிந்தவரே போட்டிக்கு லாயக்கு.

தொழில் நுட்பம் தெரிந்தவருக்கு
தோள் கொடுக்கும் அரசு கட்டில்
முதுகெலும்பை அகற்றிவிட்டுப்
பூணூலைப் பொருத்தவும்,
பிராண வாயுவை பிராமண வாயுவாக்கவும்
திறமை உடையவர்க்கு
எப்போதும் உண்டு இட ஒதுக்கீடு

போயின மானம்... போயின உணர்வு
ஆயினும் என்ன
வயிறு பிழைத்து வாழ்தல் அரிது

வாழ்க! வாழ்க வீர மங்கை
வாங்கிக் கொள்க நமது பங்கை.

(பரிசில் பெற்ற அமைச்சர்களின்
படிப்பினையிலிருந்து பாடியது)

படிப்பகம்